வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 27.07.2022 புதன்கிழமை | இதழ் : 233 | பக்கங்கள் : 16

# இந்தியா, சீனா உதவினால் மட்டுமே எரிபொருள் பிரச்னை தீரும்!

## ஓகஸ்டின் பின் நிச்சயமற்றநிலை என்கிறார் மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஜூலை 27

இந்திய அல்லது சீனா உதவினால் மட்டுமே எரிபொருள் பிரச்னையைத் தீர்க்கலாம். ஓகஸ்ட் நடுப்பகுதி வரையே எரிபொருள் குறைவின்றி கிடைக்கும். அதன் பின்னர் எரிபொருள் கிடைப்பதில் நிச்சயமற்ற நிலை உள்ளது என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். 15

## மீண்டும் முகக்கவசம்!

### சுகாதாரத் தரப்பு அறிவுறுத்தல்



கொழும்பு, ஜூலை. 27

இலங்கையில் மீண்டும் கொரோனாப் பரவல் அதிகரித்துவரும் நிலையில் பொது இடங்களுக்குச் செல்லும்போதும் பயணத்தின்போதும் முன்னரைப் போல முகக்கவசத்தை அணியுமாறு சுகாதார அமைச்சு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் மீண்டும் கோவிட்-19 பரவும் 15

## ஐ. எம். எவ்வின் உதவி இலங்கைக்கு கிட்டாது

### சர்வதேச பொருளியல் நிபுணர்

நியூயோர்க், ஜூலை 27

இலங்கை அதன் அரசியல் நெருக்கடிகளிலிருந்து மீளும் வரையில் சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார உதவி செயல்திட்டம் இலங்கைக்கு கிட்டப்போவதில்லை என்று ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டெபோரா ப்ரோட்டிகம் தெரிவித்துள்ளார். 15

## இன்று கூடுகிறது பாராளுமன்று; அவசரகால சட்டம்மீது விவாதம்

கொழும்பு, ஜூலை 27

இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாராளுமன்றம் கூடுகின்றது. இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரகடனப்படுத்திய அவசரகால சட்டம் தொடர்பில் விவாதிக்கப்படவுள்ளது.

பொது பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் கீழ் பதில் ஜனாதிபதியாக இருந்தபோது அவசர கால சட்டம் பிரகடனப்படுத் 15



கியூ. ஆர். குறியீட்டு முறையில் எரிபொருள் விநியோகிக்கும் செயல்பாடு நேற்று நாடு முழுவதும் ஆரம்பமானது. எரிபொருள் நிறுவன ஊழியர் ஒருவர் கியூ. ஆர். குறியீட்டை பரிசோதிக்கிறார்....

## வேகமெடுக்கிறது கொரோனா; நேற்று மட்டும் 119 தொற்றாளர்!

### 4ஆவது தடுப்பூசியை பெற அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 27

நாட்டில் கொரோனா தொற்று பரவல் மீண்டும் வேகமாகப் பரவ ஆரம்பித்துள்ளது. நேற்றைய தினம் மட்டும் 119 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னர், அதிக தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட முதல் சந்தர்ப்பம் இது வாகும்.

இதனிடையே கடந்த 10 நாட்களில் 600 தொற்றாளர்கள் கண்ட நியப்பட்டுள்ளனர். அத்துடன், நேற்றுமுன்தினம் மட்டும் தொற்றால் 5 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.


சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் அறிக்கையின்படி, 2020 15

## இலங்கை வரும் சீனாவின் கப்பலால் இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்?

புதுடில்லி, ஜூலை 27

சீனாவின் விண்வெளி கண்காணிப்பு கப்பலான சைனாஸ் யுவான்வாங் - 5 என்ற கப்பல் ஓகஸ்ட் 11- 17ஆம் திகதி வரை அம்பாந்தோட்டையில் தரித்து நிற்கவுள்ளது.

இந்தக் கப்பலின் வருகை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்று இந்திய ஊடகங்கள் எதிர்வுகூறியுள்ளன. இதேசமயம், இந்தியப் பெருங்கடல்



மண்டலத்தின் வடமேற்கு பகுதியில் செயற்கைக் கோள் ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என்று கூறப்படுகின்றது. 15

## போராட்டக்காரர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 27

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரரான டனிஸ் அலி வெளிநாட்டுக்கு தப்பிச்செல்ல முயன்ற வேளை விமானத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து துபாய்க்கு விமானம் மூலம் செல்ல முயன்றவேளை அவர் கைதுசெய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வு பிரிவு பொலிஸாரால் அவர் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மீண்டும் உயர்ந்தது கொரோனா மரணம்

கொழும்பு, ஜூலை 27

நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால் 5 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 60 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மூன்று பேரும், இரு பெண்கள் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

நாட்டில் மீண்டும் கொரோனா தொற்று வேகமாக பரவி வருவதன் காரணமாக மக்கள் முகக்கவசங்களை அணிந்து மிகுந்த பாதுகாப்புடன் இருக்குமாறு மருத்துவர்கள் கேட்டுள்ளனர். (ஐ)

## பொருளாதார மந்தநிலையை 2023இல் இலங்கை அடையும்!

### 85வீத வாய்ப்பு என்கிறது சர்வதேச அமைப்பு

நியூயோர்க், ஜூலை 27

இலங்கையின் பொருளாதாரம் 2023ஆம் ஆண்டு மந்தநிலையை அடையும் என்று ப்ளூம் பேர்க் என்ற சர்வதேச அமைப்பு எச்சரித்துள்ளது.

அந்த அமைப்பின் கணிப்பீட்டின்படி, சில ஆசிய நாடுகளின் பொருளாதாம் மந்தநிலைய அடையும். இலங்கை பொருளாதாரம் மந்த நிலையை அடைவதற்கான நிகழ்தகவு 85 வீதமாக உள்ளது என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும், சீனா மந்த நிலையை 15

## தேசிய சபையை நிறுவும் நடவடிக்கைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 27

மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கான தீர்வுகள் மற்றும் முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் தேசிய சபை ஒன்றை நிறுவ எதிர்க்கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதற்கான நடவடிக்கைகள் கொழும்பு மார்க்ஸ் பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை 15

## இப்படியும் நடக்கிறது...!

அவர் ஒரு போராளி இயக்கம் ஒன்றின் முக்கியஸ்தர். அவருடன் பழைய விடயங்களைகக் கதைத்துக் கொண்டிருந்தபோது அவர் சொன்ன தகவல் ஒன்றுதான் ஞாபகத்துக்கு வருகின்றது.

சகோதர இயக்கங்களிடையே படுகொலைகள் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலம் அது. அப்போது ஒருவரை ஒருவர் படுகொலை செய்வதை 'போட்டுத் தள்ளுவது' என்ற சொல்லாடலே பிரபல்யமானது.

மாற்று இயக்கம் ஒன்றின் முக்கியஸ்தர் ஒருவரை மற்றுமோர் இயக்கம் 'போட்டுத் தள்ள' முடிவெடுத்துவிட்டது. அவரைப் 'போட்டுத்தள்ளும்' பொறுப்பு ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அவர் போட்டுத் தள்ளவேண்டியவரை நேரில் தெரியாது.

அவரை இவருக்கு அடையாளம் காட்ட, அந்த மாற்று இயக்கத்தவரை நன்கு தெரிந்த அவரின் நண்பர் ஒருவரின் உதவி நாடப்பட்டது. அவரும் சம்மதித்து அவரைக் காட்டுவதற்காக அவருடன் போயிருக்கிறார்.

போனவர் அவரைப் போட்டுத் தள்ளிய பின்னர், அவரை இனம்காட்ட உதவிய அவரின் நண்பரையும் போட்டுத் தள்ளிவிட்டு திரும்பியிருக்கிறார்.

அட, ஏனடாப்பா உதவிசெய்ய வந்தவனையும் போட்டனி என்று அவரிடம் கேட்டபோது அவர் சொன்னது, 'அண்ணே, இவ்வளவு காலமாக அவனுடன் பழகும் ஒருத்தனையே இவன் காட்டிக்கொடுக்கிறான் எண்டால், என்னைக் காட்டிக்கொடுக்க நேரமா செல்லும்? அதுதான் அவனையும் போட்டனான்' என்றாராம்.

ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக நடந்த வாக்கெடுப்பின்போது ரணிலுக்கு ஆதரவாக நமது கூட்டமைப்பின் எம். பிக்கள் சிலரும் வாக்களித்ததாகவும், அதற்காக அவர்களுக்கு பல கோடி ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டதாகவும் ஓர் அநாமதேய செய்தி சமூக வலைத்தளங்களிலும் வட்ஸ்அப்பிலும் பகிரப்பட்டு வருகின்றது. ஏதோ பணத்தை தாங்களே எண்ணிப் பார்த்தவர்கள் போலவும், அல்லது அவர்களின வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டவர்கள் போலவும் சிலர் அந்த தகவலை பகிர்ந்து வருகின்றனர்.

பாடசாலை மலசலகூடத்தில் அவரும் இவரும் காதல் என்று எழுதுவதுபோலவும், பக்கத்துவீட்டு பெண்ணும் எதிர்வீட்டு பையனும் காதலிப்பதாக மதில் சுவரில் எழுதி பழக்கப்பட்டவர்களின் வேலை போல இந்த தகவல் பகிரப்பட்டு வருகின்றது. அந்தத் தகவலை சொல்வபவர் யார் என்பது குறிப்பிடப்படாமல், அநாமதேய மொட்டைக் கடிதம்போல அது பகிரப்பட்டு வருகின்றது.

அதன் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்பதை அறிய நீங்கள் அதிகம் சிரமப்பட வேண்டியதில்லை. தங்களது 'டீல்'கள் பிழைத்துப்போனதால் ஆத்திரமடைந்தவர்களே இதனைப் பின்னால் இருந்து செய்விப்பார்கள் என்பதும் இரகசியமானதல்ல.

அதுபற்றி இன்னுமொரு பத்தியில் விரிவாக பார்க்கலாம். ஆனால், இந்த வதந்தியை பரப்புபவர்கள் ரணிலையே மீண்டும் மீண்டும் கேவலப்படுத்துகின்றனர் என்றே தெரிகின்றது.

ஓர் இரகசிய வாக்கெடுப்பில் தனக்கு வாக்களிப்பதற்காக பணத்தை வாரி இறைக்குமளவுக்கு ரணில் என்ன முட்டாளா என்று ஓர் அரசியல் விமர்சகர் கேட்டதும் நியாயமானதுதான்.

தான் அங்கம் வகிக்கும் கட்சி ஒரு முடிவெடுத்த பின்னர், அந்த முடிவுக்காக என்ன 'டீல்' நடந்தது என்பதைக் கூட தெரிந்து கொள்ளாமல், இன்னுமொருவர் அவர்களுக்கு பணம் கொடுக்க முன்வருவாரா என்பதை சிந்தித்து பார்க்கும் அளவுக்கு தமிழர்கள் அறிவு உள்ளவர்கள் அல்ல என்ற அவர்களின் நம்பிக்கையே இதுபோன்ற வதந்திகளைப் பரப்பவர்களின் நம்பிக்கையாக இருக்கவேண்டும்.

மேலே அந்த போராளிக்குழு ஒன்றின் தலைவர், தான் மாற்று இயக்கத்தவரைப் போட்டுத்தள்ளுவதற்கு உதவியவரையும் போட்டுத்தள்ளிய செய்தியை மேலே தந்திருந்தேன். தனக்கு நீண்டகாலமாகத் தெரிந்த ஒருவரையே காட்டிக்கொடுக்க தயாரானவர் தன்னைக் காட்டிக் கொடுக்க நேரமா செல்லும் என்று கேட்டதுபோல, தனது கட்சிக்கு துரோகம் செய்கின்ற ஒருவனை நம்பி, பணத்தப் பெற்றுக்கொண்டாலும் அதுகும் ஓர் இரகசிய வாக்கெடுப்பில், அவன் தனக்குத்தான் வாக்களிப்பான் என்று நம்பகின்ற அளவிற்கு ரணில் ஒரு முட்டாள் இல்லையே.!

**- ஊர்க்குருவி**

# ரயில் திணைக்களத்துக்கு ஒருநாளில் ரூ. 10 கோடி நட்டம்!

## அமைச்சர் பந்துல கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 27

ரயில் திணைக்களம் தற்போது நாளொன்றுக்கு 10 கோடி ரூபாய் நஷ்டத்தை எதிர்கொள்கிறது. அந்த நஷ்டத்தை ஈடுசெய்வதற்காகவே ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இவ்வாறு தொடர்ந்தும் ரயில் திணைக்களத்தில் நஷ்டத்தில் இயங்க இடமளிக்க முடியாது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 2012 ஆம் ஆண்டு ரயில் திணைக்களத்தின் மாதாந்த வருமானம் 4.8 பில்லியன் ரூபாயாகும். ஆனால் 34 பில்லியன் ரூபாய் நஷ்டமாகும். அதே போன்று 2021 இல் வருமானம் 4.5 பில்லியன் ரூபாயாகக் காணப்பட , நஷ்டம் 44 பில்லியன் ரூபாவாக உயர்வடைந்தது.

இவ்வாறு தொடர்ந்தும் பெரும் நஷ்டத்தை எதிர்கொள்வதால் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல் மற்றும் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கான கொடுப்பனவை வழங்குதல் உள்ளிட்டவற்றில் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போது புகையிரத திணைக்களம் நாளொன்றுக்கு 10 கோடி ரூபாய் நஷ்டத்தை எதிர்கொள்கிறது. இவ்வாண்டு இதுவரையான காலப்பகுதியில் மேலதிக வேலை நேர கொடுப்பனவு மாத்திரம் 2.3 பில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காகவும், நஷ்டத்தை ஈடுசெய்வதற்காகவுமே ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தற்போது எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் பஸ் போக்குவரத்தில் காணப்படுகின்ற சிக்கலால் பெரும்பாலான பொது மக்கள் ரயில் சேவையில் பயணிக்கத் தொடங்கியுள்ளனர். கடந்த சில மாதங்களுடன் ஒப்பிடும் போது ரயில் பாவனையாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

எவ்வாறிருப்பினும் இதனைக் கருத்தில் கொண்டு புகையிரத பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பிலோ அல்லது ரயில்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பிலோ அவதானம் செலுத்தப்படவில்லை.

காரணம் ஏற்கனவே இறக்குமதி செய்யப்படுள்ள புகையிரத பெட்டிகளுக்கான கொடுப்பனவுகளை செலுத்தாமலிருப்பதால் , அதற்கான தண்டப் பணத்தையும் செலுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் ரயில் பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில் அவதானம் செலுத்த முடியாது - என்றார்.

(ஐ)

# கிளிநொச்சியில் எரிபொருள் கேட்டு மக்கள் வீதி மறிப்புப் போராட்டம்!




கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சியில் எரிபொருள் கோரி வீதி மறி யல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

கிளிநொச்சி பரந்தன் சந்தியில் உள்ள எரிபொ ருள் நிரப்பு நிலையத்தில் நேற்றைய நாளுக்கான இலக்கத்தகட்டின் இறுதி இலக்கத்தினடிப்படையில் வரிசையில் காத்திருந்த மக்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, ஏ-9 வீதியை மறித்து போராட் டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, அந்தப் பகுதிக்கு வருகை தந்த பொலிஸார் ஒருவரை கைது செய்து வாகனத்தில் ஏற்றினர்.

இந்த நிலையில், பொதுமக்கள் பொலிஸாரிடம் வேண்டுகை விடுத்ததற்கமைவாக குறித்த நபரை விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்தனர். குறித்த மக்களுக்கு தொடர் இலக்கம் வழங்கப்பட்டு, எரிபொருள் வந்ததும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் மக்கள் அமைதியாக கலைந்து சென்றனர்.

(ஐ)

# மட்டக்களப்பு விபத்தில் சகோதரர்கள் இருவர் பலி!



மட்டக்களப்பு, ஜூலை 27

மட்டக்களப்பு தன்னாமுனையில் நேற்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சகோதரர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியின் தன்னாமுனையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் சத்துருகொண்டான் கிராமத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களாவர். டிப்பர் ரக வாகனம் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
27.07.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆடி 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஆபத்தான அரசியல் ஆட்டம்?

தமிழ்த் தேசிய அரசியல் போகுமிடம் தெரியாமல் நகர்கின்றதா - என்னும் கேள்வி எழுகின்றது. நடைபெறும் சம்பவங்களும், கிடைக்கும் தகவல்களுமே இவவாறானதொரு கேள்வியை நாம் கேட்பதற்கான காரணமாகும். நாம் தொடர்ந்தும் ஒரு விடயத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றோம். அதாவது, தென்னிலங்கையில் இடம்பெறும் அரசியல் நிகழ்வுகளின் அடிப்படையில், தமிழ்த் தேசிய தரப்புக்கள் தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடாது. எவர் ஆட்சியிலிருந்தாலும், தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தியே அவர்களை அணுக வேண்டும். ஆனால், நடைபெறுகின்ற விடயங்களோ தலைகீழாக இருக்கின்றன.

ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அளவுக்கதிகமான ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்தனர். உண்மையில் இது தேவையற்ற ஒன்று. ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவதற்கான சூழல் மிகவும் பிரகாசமாக இருந்தது. கூட்டமைப்பின் வாக்குகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேவைப்பட்டிருக்கவில்லை. மேலும், ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பின் ஆதரவைப் பெறும் முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கவில்லை. ஏனெனில், ரணில் இந்த அரசியல் சதுரங்கத்தில் இறங்கியது தனது ஆளுமையையும், ராஜபக்ஷக்களின் நெருக்கடியையும் கருத்தில் கொண்டு மட்டும்தான். எனவே, கஜேந்திரகுமாரை போன்று, வாக்கெடுப்பை தவிர்ப்பது அல்லது விக்னேஸ்வரன் போன்று, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை பகிரங்கமாக மேற்கொள்வதே கூட்டமைப்புக்கு முன்னாலிருந்த இரண்டு தெரிவுகளாகும்.

ஆனால், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் விடயங்களை சரியாக ஆராயாமல் தங்களின் தனிப்பட்ட விருப்புவெறுப்புக்களிலிருந்தே விடயங்களை அணுகியிருந்தனர். டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் மூன்றாவது தெரிவையே கூட்டமைப்பு தெரிவு செய்தது. இது கூட்டமைப்புக்குள்ளும் தமிழ் மக்கள் மத்தியிலும் தேவையற்ற நெருக்கடிகளை ஏற்படுத்தியிருந்தது. அதேவேளை கூட்டமைப்பு தொடர்பில் மக்கள் மத்தியிலும் தேவையற்ற குழப்பங்கள் ஏற்படுவதற்கும், இது காரணமாகியிருக்கின்றது. இவ்வாறான சிக்கல்களை தவிர்க்கும் நோக்கிலேயே நாம் முன்கூட்டியே சில விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தோம்.

ஜனாதிபதி தேர்தலின்போது இடம்பெற்ற சில சம்பவங்கள் தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை நீண்டகால நோக்கில் பாதிக்கக்கூடியவையாகவும் இருந்தன. சம்பந்தனின் வீட்டில் இடம்பெற்ற கூட்டத்தின்போது, இந்திய தூதரகத்தை தேவையற்ற வகையில் சம்பந்தப்படுத்தியமை கூட்டமைப்பின் இராஜதந்திர நம்பகத் தன்மையை கேள்விக்கு உள்ளாக்கியிருக்கின்றது. அதேவேளை, வாக்கெடுப்பு இடம்பெறுவதற்கு முன்பதாக மிகவும் இரகசியமாக சீனத் தூதுவரை தமிழ் அரசு கட்சியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்திருப்பது மேலும் சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன. இவைகள் எதற்காக? இவற்றால் தமிழ் மக்களுக்கு கிடைத்த - கிடைக்கப் போகும் நன்மைகள் என்ன?

குறித்த சந்திப்பு தொடர்பில் நாம் உறுதிப்படுத்தியிருக்கின்றோம். அந்த சந்திப்பு என்ன நோக்கில் இடம்பெற்றது? ஏன் அந்த சந்திப்பு தொடர்பில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை? சந்திப்பின் பின்னரும்கூட, இந்த விடயம் ஏன் மிகவும் இரகசியமாகவே பேணப்பட்டது? இந்த சந்திப்பின் பின்னர்தான், சம்பந்தனின் வீட்டில் இடம்பெற்ற கூட்டத்தின் போது, இந்திய தூதரகம் தொடர்பான சர்ச்சைகள் இடம்பெற்றிருந்தன. இந்தியத் தூதரகம் அதனை மறுத்திருந்தது.

சம்பந்தன் வீட்டு விவகாரம் தற்செயலாக இடம்பெற்றதா அல்லது வேறு நோக்கங்கள் கொண்டதா? விடயங்கள் ஒவ்வொன்றையும் தொடர்புபடுத்தி ஆராயும் போது, சில கேள்விகளை தவிர்க்க முடியவில்லை. தமிழ் மக்களின் நலனை தவிர வேறு எதனையும் நாம் கருத்தில் கொள்ளவில்லை. எனவே, தமிழ் மக்களின் நலன்களை நீண்டகால நோக்கில் பாதிக்கும் எந்தவொரு விடயம் தொடர்பிலும் நாம் அமைதியாக இருக்க முடியாது. தமிழ் மக்களால் பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், எந்தவொரு தீர்மானங்களை மேற்கொள்ளும் போதும், தமிழ் மக்களின் உடனடி மற்றும் நீண்டகால நலன்களை கருத்தில் கொண்டு மட்டுமே தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும். ஆனால், இப்போது நடைபெற்ற - நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விடயங்கள், அனைத்தையும் நோக்கும்போது ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது, தமிழ் மக்களின் நலனை தவிர, ஏனையவைகள் அனைத்தும் திறம்பட முன்னெடுக்கப்படுகின்றன.

# ஆளுமையற்ற தலைமைத்துவங்கள்!

அனந்த பாலகிட்ணர்



இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களாக இருக்கலாம் அல்லது தென்னிலங்கையாக இருக்கலாம். ஒட்டு மொத்தமாக அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நாட்டு நிலவரத்தை கையாள ஆக்கபூர்வமான தலைமைத்துவங்கள் இல்லாதிருப்பதையே நன்கறிந்து கொள்ள முடிகின்றது.

தற்போது பொருளாதார ரீதியாக வெளிப்பட்ட சிக்கல்களோடு அரசியல் ரீதியாகவும் வெளிப்பட்ட சர்ச்சைகளை நோக்கும்போது தென்னிலங்கையிலும் வடக்கு - கிழக்கிலும் ஆளுமையற்ற தலைமைத்துவங்களினால் ஏற்பட்ட பின்னடைவுகளே இலங்கையில் இன்று தோன்றியுள்ள நெருக்கடி நிலைமைகளுக்கு பிரதான காரணமாக இருப்பதை அறிய முடியும்.

மூன்று தசாப்தகால யுத்தத்தின்போது வடக்கு - கிழக்கு மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்தனர். போக்குவரத்து சிரமங்கள்கூட மிக மோசமானவையாகவே இருந்தன. அவ்வாறான தருணங்களில் உரிய இராஜதந்திர அணுகுமுறைகளை மேற்கொண்டு ஓர் ஒத்திசைவான போக்கோடு இக்கட்டான நிலவரங்களை கையாளும் ஆளுமை வடக்கு - கிழக்கின் மிதவாத தலைவர்களிடம் மட்டுமல்ல. ஆயுதமேந்தி வடக்கு - கிழக்கு மக்களின் விடிவுக்காக போராடுகின்றோம் என்று கூறியோரிடையேயும் காணப்படவில்லை.

யுத்தம் முறுக்கேறியிருந்த காலத்தில் வடக்கு - கிழக்கு மக்கள் ஓரளவாவது நிலைமைகளை சமாளிப்பதற்கு புலம்பெயர்ந்து வாழ்ந்தோரின் பங்களிப்பே பிரதான காரணமாக அமைந்திருந்தது. இல்லையேல், அக்காலப்பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் அன்றைய எத்தியோப்பியர்களைப்போல எலும்புக்கூடுகளாகவே நடமாடித்திரிய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

வடக்கு - கிழக்கில் மாத்திரமல்ல. தென்னிலங்கையிலும் ஆளுமையற்ற அரசியல் தலைமைத்துவங்கள் வடக்கு - கிழக்கு யுத்தத்தை மையமாக வைத்து "எரிகிற வீட்டில் பிடுங்குவது இலாபம்" என்ற போக்கிலேயே நடந்து கொண்டிருந்தன.

இன ஒற்றுமையோடு பொருளாதார வளர்ச்சிப்பாதையில் நாட்டை வழிநடத்தக் கூடிய ஆளுமைகள் அன்று இலங்கை அரசியலில் காணப்பட்டிராத நிலையில் வடக்கு - கிழக்கு யுத்தமும் நீண்டு கொண்டிருந்தது.

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலுமிருந்த பொருளாதார வளங்களும் தேய்வடைந்த வண்ணமே சென்று கொண்டிருந்தன.

வடக்கு - கிழக்கில் நல்ல வருவாயை ஈட்டித்தந்ததோடு பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கிய தொழிற்சாலைகளும் மூடப்படும் நிலைக்குள்ளாகின.

யுத்தம் முடிவுக்கு வந்ததுமே நாடு அபரிமிதமாக வளர்ச்சி கண்டு விடும் என்று 2009ஆம் ஆண்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த ராஜபக்ஷவினர் குறிப்பிட்டனர்.

ஆனால், யுத்தம் முடிவுக்கு வந்தது முதல் ராஜபக்ஷவினரின் கொட்டம் அண்மையில் அடக்கப்படும் வரை அவர்கள் தம்மை வளர்த்துக்கொண்டனரே தவிர, அவர்களின் அரசியல் ஆளுமை அரசியல் தீர்வுகளையோ அல்லது யுத்தத்துக்கு பின்னரான பொருளாதார சீர்திருத்தங்களையோ மேற்கொள்ள உதவவில்லை.

இதேவேளை, வடக்கு - கிழக்கின் அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டமே வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வை எட்டுவதற்குரிய பரிகாரமாக இருக்கின்றதென்பதை அறிந்து வைத்துள்ளனர். ஆயினும், அதனை கொண்டுவர உதவிய இந்தியாவுடனும் சர்வதேச சமூகத்துடனும் ஒன்றிணைந்து ஆக்கபூர்வமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை மீளவும் அமுலாக்குவதில் தமிழ் அரசியல் தரப்பில் தகுந்த ஆளுமை காணப்படாதுள்ளது.


தற்போதைய பின்னணியில் வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல்வாதிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசில் அமைச்சரவைப் பொறுப்புகளை பெற வேண்டுமென்ற வகையிலும் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது.

முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அமைச்சுப் பதவிகள் வேண்டாம். அதனால் கேடே ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார். வட மாகாண முதலமைச்சர் பதவியைப் பெற்று அந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்வது பற்றி சிந்திப்பதை விட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களோடு ஏட்டிக்குப்போட்டியாக வடக்கு - கிழக்கு அரசியல் பற்றி பிரஸ்தாபித்தவரே முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

ஆகவே, அமைச்சர் பதவியை சி.வி. விக்னேஸ்வரனோ அல்லது ஏனைய தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களோ பெற்றுக்கொண்டாலும் பெறாவிட்டாலும் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி பற்றி அவர்கள் ஆக்கபூர்வமாக சிந்திக்கப்போவதில்லை என்பது மட்டுமே தெளிவு.

இதுகுறித்து தென்னிலங்கை அரசியல் வட்டாரமும் நன்கறிந்தே வைத்துள்ளது. அத்துடன், தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களிலும் ஆளுமையற்ற தலைமைத்துவங்களே காணப்படுகின்ற நிலையில் இலங்கை அரசியல் உறுதிப்பாட்டுடனான ஒரு மேம்பாட்டை எட்டுமா? என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
உங்கள் முயற்சியில் வெற்றி உண்டாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.குடும்பத்தினரின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள். வருவாய் அதிகரிக்கும். தொழிலில் ஏற்பட்ட தடை விலகும். முயற்சி பலன் தரும்.

**இடபம்**
உற்சாகத்துடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். எண்ணம் நிறைவேறும்.வர வேண்டிய பணம் வந்து சேரும். பழைய கடன்களை அடைப்பீர்கள். நன்மையான நாள்.

**மிதுனம்**
குழப்பம் அதிகரிக்கும். செயல் தடுமாற்றமாகும். விழிப்புணர்வு அவசியம். யோசித்து செயல்பட வேண்டிய நாள். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம்.மற்றவர் விஷயத்தில் தலையிடாதீர்.

**கடகம்**
எதிர்பாராத செலவுகளால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். பொறுமை அவசியம்.அலைச்சல் அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் சில சங்கடங்களை சந்திப்பீர்கள். குடும்பத்தில் குழப்பம் ஏற்படும்.

**சிம்மம்**
நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். வரவேண்டிய பணம் வந்து சேரும்.புதிய முயற்சி நிறைவேறும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். பழைய கடன்கள் வசூலாகும்.

**கன்னி**
பணியிடத்தில் பாராட்டு பெறுவீர்கள். உங்கள் ஆலோசனையை அதிகாரிகள் ஏற்பர்.திட்டமிட்டு செயல்பட்டு எண்ணியதை நிறைவேற்றிக் கொள்வீர்கள். விருப்பம் நிறைவேறும்.

**துலாம்**
உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். உங்கள் முயற்சி பலிதமாகும்.தடைபட்ட செயல்களை மீண்டும் தொடர்வீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**விருச்சிகம்**
செயலில் கவனம் தேவை. புதிய முயற்சிகள் வேண்டாம். இனம் புரியாத சங்கடத்திற்கு ஆளாவீர்கள். மனம் ஒரு நிலையில் இல்லாமல் போகும். பணியிடத்தில் கவனம் தேவை.

**தனுசு**
எதிர்பார்ப்பு நிறைவேறும். வாழ்க்கைத் துணையுடன் இருந்த பிரச்னை நீங்கும். புதிய முயற்சி பலன் தரும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். எதிர்பார்த்த அனுகூலம் ஏற்படும்.

**மகரம்**
பொருளாதார நெருக்கடி விலகும். எதிர்பார்த்த பணம் தேடி வரும். ஒரு முயற்சியை நிறைவேற்றி லாபமடைவீர்கள். பணியிடத்தில் உங்கள் நிலை உயரும். எதிர்பார்த்த நல்ல தகவல் வரும்.

**கும்பம்**
குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். உங்களைச் சுற்றி இருப்பவர்களைப் பற்றி தெரிந்து கொள்வீர்கள். நண்பர்களின் ஆதரவுடன் ஒரு செயலை செய்து லாபம் காண்பீர்கள்.

**மீனம்**
அரசு வழியிலான செயல்கள் இழுபறியாகும். அலைச்சல் அதிகரிக்கும்.உடல்நலக்குறைவு உண்டாகும். மருத்துவரிடம் ஆலோசனை பெறுவீர்கள். தாய்வழி உறவினர்களால் சில சங்கடங்களை சந்திக்க வாய்ப்புண்டு.

# ஏட்டிக்குபோட்டியாக நடக்கும் பன்னீர்செல்வம், பழனிசாமி!

## -மாறிமாறி நிர்வாகிகள் நீக்கம் -

சென்னை, ஜூலை 27

ஓ.பன்னீர்செல்வம், பழனிசாமி ஆகியோர் போட்டி போட்டுக் கொண்டு அ. தி. மு. க. நிர்வாகிகளை நீக்கி வருகின்றனர். மேலும், புதிய பொறுப்பாளர்களை நியமித்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஓ.பன்னீர்செல்வம் 10 பேரையும், பழனிசாமி 14 பேரையும் நீக்கியுள்ளனர். பன்னீர்செல்வம் அணி அ. தி. மு. கவுக்கு இணை ஒருங்கிணைப்பாளராக ஆர். வைத்திலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.


அ. தி. மு. கவினர் பன்னீர்செல்வம், பழனிசாமி ஆகியோர் தலைமையில் இரு அணிகளாக செயல்பட்டு வருகின்றனர். இரு அணிகளும் மாறி மாறி நிர்வாகிகளை நீக்கியும், நியமித்தும் வருகின்றனர். இதனிடையே நேற்று முன்தினம் 10 மாவட்ட செயலாளர்களை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்கி பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார். மேலும் கட்சிக்கு இணை, துணை ஒருங்கிணைப்பாளர்களையும் அறிவித்துள்ளார்.

அதன்படி, துணை ஒருங்கிணைப்பாளர் பதவியில் இருந்த ஆர். வைத்திலிங்கம் கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். துணை ஒருங்கிணைப்பாளர்களாக முன்னாள் அமைச்சர் கு.ப.கிருஷ்ணன், அமைப்புச் செயலாளர் ஜே. சி. டி. பிரபாகர், மனோஜ் பாண்டியன் எம்எல்ஏ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, 14 நிர்வாகிகளை கட்சியில் இருந்து நீக்குவதாக கட்சியின் இடைக்கால பொதுச்செயலர் பழனிசாமி அறிவித்துள்ளார்.

இரு தரப்பிலும் நிர்வாகிகளை நீக்குவதும், சேர்ப்பதும் தொண்டர்களிடையே வேதனையையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# யூக்கலிப்டஸ் மரங்களை நட தமிழகத்தில் தடை விதிப்பு!



சென்னை, ஜூலை 27

தமிழக வனப்பகுதிகளில் அந்நிய மரங்களை அகற்றி சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்று கோரி தொடரப்பட்ட வழக்கு மீதான விசாரணை உயர் நீதிமன்றில் நடக்கிறது.

நேற்று நடந்த வழக்கில், இதுதொடர்பான அறிக்கையை தமிழக அரசு தாக்கல் செய்தது. அதில், தமிழக வனப்பகுதிகளில் யூக்கலிப்டஸ் உள்ளிட்ட 5 வகையான அந்நிய மரங்களின் எணிக்கை குறித்து வனத்துறை அதிகாரிகள் மூலம் கணக்கெடுக்கப்பட்டு, அதை அகற்ற கொள்கை முடிவு எடுத்து கடந்த ஜூலை 13 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், “இந்த விஷயத்தில் தமிழக அரசு வெறும் அறிக்கைகளை மட்டுமே தாக்கல் செய்கிறது. ஆக்கப்பூர்வமாக செயல்படவில்லை. தமிழக வனப்பகுதிகளில் உள்ள அந்நிய மரங்களை அகற்ற 10 ஆண்டுகள் வரை காத்திருக்க முடியாது.

இந்தப் பணியை விரைவாக முடிக்க தனியாரிடம் கூட ஒப்படைக்கலாம். அந்நிய மரங்களை அகற்ற கொள்கை முடிவு எடுத்துள்ள தமிழக அரசு, யூக்கலிப்டஸ் மரங்களை ஏன் நட வேண்டும், என கேள்வி எழுப்பினர். பின்னர் தமிழகத்தில் இனிமேல் யூக்கலிப்டஸ் மரங்களை யாரும் நடக்கூடாது என தடை விதித்து உத்தரவிட்டனர்.

# முருகன் மீதான வழக்கை விரைந்து முடிக்க உத்தரவு



சென்னை, ஜூலை 27

தனது சிறை அறையில், சோதனை நடத்த எதிர்ப்பு தெரிவித்ததாக ராஜீவ் கொலை வழக்கு ஆயுள் கைதி முருகன் மீதான வழக்கை விரைவாக விசாரித்து முடிக்க வேலூர் நீதிமன்றத்துக்கு, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதியாக வேலூர் சிறையில் உள்ள முருகனின் அறையில், கடந்த 2020ஆம் ஆண்டு சிறை காவலர் உள்ளிட்டோர் சோதனை நடத்தினர்.

இந்த சோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்த முருகன், சிறை அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகக் கூறி, அரசு அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுத்தல் உள்ளிட்ட ஐந்து பிரிவுகளின் கீழ் முருகன்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.


இந்த வழக்கை இரத்து செய்யக்கோரி முருகன் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதி சதீஷ்குமார் முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது முருகன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், ”இந்த வழக்கில் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை” என்று தெரிவித்தார்.

இதற்கு மறுப்பு தெரிவித்த அரசு தரப்பு வழக்கறிஞர், “குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதாக” கூறினார்.

இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதி, “முருகன் மீதான வழக்கை விரைந்து முடிக்க வேலூர் நடுவர் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டு, மனுவை முடித்து வைத்து” உத்தரவிட்டார். (ஐ)

# ஹிந்தி திணிப்பு என்று கூறி மக்களை ஏமாற்றுகின்றனர்!



சென்னை, ஜூலை 27

ஹிந்தி திணிப்பு என்று கூறி மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூரில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர், “புதிய கல்விக் கொள்கையை நாம் ஏற்றுக் கொண்டு, இன்னொரு மொழியைக் கற்பதில் எந்தத் தவறும் இல்லை. மொழித் திணிப்பு என்று கூறி அரசியல் செய்யாமல், கிராமப்புற மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கக் கூடிய நவோதயா பள்ளிகளுக்கு தமிழக அரசு எதிர்ப்புத் தெரிவிக்காமல், அவற்றைத் திறக்க முன்வரவேண்டும்” என்று கூறியிருந்தார்.

தமிழசை சவுந்தரராஜனின் இந்தக் கருத்துக்கு, தி. மு. கவின் அதிகாரபூர்வ நாளிதழில் “பதவி மோகத்தால் தமிழிசை, ஹிந்தியிசை ஆகலாமா?” என்ற தலைப்பில் விமர்சனக் கட்டுரை வெளியிட்டுள்ளது. (ஐ)






# யாழ்.பல்கலைக்கழகத்தில் கவனவீர்ப்புப் போராட்டம்!

## அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து

யாழ்ப்பாணம், ஜூலை. 27

அரசினுடைய நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் யாழ்.பல்கலைக் கழகத்தில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் எற்பாட்டில் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஒன்றுகூடிய பல்கலைக் கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களுடைய போராட்டத்துக்கு மதிப்பளி, நாட்டைக் கொள்ளை அடிக்காதே, ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கு போன்ற பதாகைகளை ஏந்தி விரிவுரையாளர்கள் கவனயீர்ப்பை முன்னெடுத்தனர். (அ)

# பிரதமர் இந்திய தூதுவர் நேற்று முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜூலை. 27

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே நேற்று பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்ததாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்போது, நாட்டில் புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் ரயில் உள்ளிட்ட போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்க இந்திய தூதுவர் ஒப்புக்கொண்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலாத் துறையில் விரைவான முதலீடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# ரணில் விக்ரமசிங்கவுக்கு நரேந்திர மோடி வாழ்த்து

கொழும்பு, ஜூலை. 27

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு, இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு இந்தியா தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மக்களின் பரஸ்பர நலனுக்காக ஜனாதிபதியுடன் நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்திருப்பதாக இந்திய பிரதமர் மீண்டும் வலியுறுத்துவதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# மாத்தளைப் பகுதியில் எரிபொருள் வரிசையில் காத்திருந்தவர் மரணம்!

கொழும்பு, ஜூலை. 27

மாத்தளைப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில், வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

காரில் தங்கியிருந்தபோதே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னால் சென்ற மற்றுமொரு காருடன், குறித்த கார்திடீரென மோதியுள்ளது.

இதனையடுத்து, மோதிய கார் சாரதியை அவதானித்த போது, அவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (அ)

# நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வகட்சி அரசே தேவை!

## பிரதமர் தினேஷ் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை. 27

“நாட்டை மீட்டெடுக்க சர்வகட்சி அரசே தேவையானது. அனைத்துத் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் தமது கட்சிகளை வளர்ப்பதை விடுத்து சர்வகட்சி அரசில் இணைந்து நாட்டை வளப்படுத்தவேண்டும்.”

- இவ்வாறு புதிய பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதைய ஆட்சியில் சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற பேதம் இருக்கக்கூடாது. அதேவேளை சிறுபான்மைக்கட்சியினர், பெரும்பான்மையினக் கட்சியினர் என்ற பேதமும் இருக்கக் கூடாது.

தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் அனைத்தும் தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும். அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்கவேண்டும். நாடு தற்போது நெருக்கடியான நிலைமையைச் சந்தித்துள்ளது. அதிலிருந்து மீண்டு எழவேண்டும்.

இந்தநிலையில், மக்கள் பிரதிநிதிகள் தங்களுடைய கட்சிகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொள்ளாமல் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி தீர்க்கமான முடிவு எடுத்து சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்க வேண்டும் - என்றார். (அ)

# அம்பலாங்கொடை பிரதேசத்தில் துப்பாக்கி சூட்டில் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜூலை. 27

அம்பலாங்கொடை பிரதேசத்தில் நேற்று துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

அம்பலாங்கொடை, உரவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் நபர் ஒருவர் உயிரிழந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் தெரியவில்லை என்பதுடன், அம்பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அச்சுறுத்தலினூடாக மக்களை அடிப்பணிய வைக்க முடியாது!

## அருட்தந்தை ரொஹான் சில்வா



கொழும்பு, ஜூலை 27

சந்திக்கு சந்தி இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளதனூடாக நாட்டில் யுத்தம் ஒன்று ஏற்பட்டுள்ளதா என்ற அச்சமே மக்களது மனங்களில் ஏற்பட்டுள்ளது என்று அருட்தந்தை ரொஹான் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.மேலும், “நாட்டில் யுத்தம் ஒன்று ஏற்பட்டுள்ளதா என்ற அச்சமே தற்போது மக்களின் மனங்களில் ஏற்பட்டுள்ளது. கொழும்பு நகரிலுள்ள அனைத்து சுற்றுவட்டப் பகுதிகளில் அவ்வாறு இல்லை எனில் கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவ வாகனங்கள், இராணுவத்தினரை பார்க்கும் போது அவ்வாறான மனநிலையே ஏற்படுகின்றது.

யாருக்கு இவ்வாறு அஞ்சிக் கொண்டு இருக்கின்றோம் என்றே நினைக்கத் தோன்றுகின்றது. எதற்காக இவ்வாறு அஞ்ச வேண்டும். இவ்வாறு அச்சப்படும் அளவு என்ன நடந்தது என்றே கேட்கின்றோம். மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியே இது.

மக்கள் மனதில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்துவதற்கு முயல்கின்றனர். ஒவ்வொரு சந்தியிலும் 20, 30 இராணுவத்தினர் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு நிற்பது, இராணுவ வாகனங்கள் அணிவகுத்து நிற்பதை வைத்து இதனையே கூற முடியும். இந்த அச்சுறுத்துலுக்கு நாட்டு மக்கள் அடிபணிவார்கள் என்று நான் நினைக்கவில்லை - என்றார். (கே)

# வாகனங்களுக்கான எரிபொருள் பங்கீட்டளவு அதிகரிக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை. 27

வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒவ்வொரு வாகனத்திற்கும் வாரத்துக்கு பெறப்பட்ட எரிபொருளின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி,

மோட்டார் சைக்கிள்களுக்கு - 04 லீற்றர் பெற்றோல்.

முச்சக்கர வண்டிகளுக்கு - 05 லீற்றர் பெற்றோல்.

வான்களுக்கு - 20 லீற்றர் பெற்றோல்

கார்களுக்கு - 20 லீற்றர் பெற்றோல்

பிற வாகனங்களுக்கு - 15 லீற்றர் பெற்றோல்

லொறிகளுக்கு - 50 லீற்றர் பெற்றோல்

பஸ்களுக்கு - 40 லீற்றர் டீசல்

முச்சக்கர வண்டிகளுக்கு - 05 லீற்றர் டீசல்

வான்களுக்கு - 20 லீற்றர் டீசல்

கார்களுக்கு - 20 லீற்றர் டீசல்

பிற வாகனங்களுக்கு - 15 லீற்றர் டீசல்

லொறிகளுக்கு - 50 லீற்றர் டீசல்

என்ற அடிப்படையில் எரிபொருளின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

# சீனா செல்கின்றார் ஜனாதிபதி ரணில்!

## தூதுவர் பாலித கோஹன தகவல்

கொழும்பு, ஜுலை. 27

இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சீனாவுக்கு செல்ல திட்டமிட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ஷளது.

வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடுவதற்காக அவர் சீனாவுக்கு விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளதாக சீனாவுக் கான இலங்கைத் தூதுவர் பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத் துறைக்கு உதவுமாறு சீனாவிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் சர்வதேச ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் அம்பாந் தோட்டையிலும் சீனாவின் ஆதரவுடன் கூடிய பரந்த துறைமுகத் திட்டங்களுக்கு மேலதிக முதலீட்டை மேற்கொள்வதன் மூலம் பீஜிங், இலங்கைக்கு உதவ முடியும் என்று பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

சீனா தொடர்பில், புதிய அரசாங்கத்தின் கொள்கையில் எந்த அடிப்படை மாற்றமும் ஏற்படாது என எதிர்பார்ப்பதாகவும் பாலித கோஹன கூறியுள்ளார்.

பல மாதங்களாக சீனாவிடம் இருந்து 4 பில்லியன் அமெரிக்க டொலர் உதவிப் பொதிக்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

சீனாவின் இந்த நிதி உதவி குறித்த விவாதங்கள் இடம் பெற்று வருகின்றன.

எனினும் அடுத்த சந்திப்புக்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று பாலித கோஹன குறிப்பிட்டார்.

நிதி உதவிக்கு அப்பால், எரிபொருள், உரம் மற்றும் பிற அவசரத் தேவைப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கும் சீனா உதவ முடியும் என்று இலங்கை நம்புவதாக பாலித கோஹன கூறினார். (அ)

# வவுனியாவில் அறுவடைக்கான டீசல் விநியோகம் முன்னெடுப்பு

வவுனியா, ஜுலை. 27

வவுனியாவில் சிறுபோக நெல் அறுவடைக்குரிய டீசலினை கட்டம் கட்டமாக வழங்கும் செயற்பாடு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா மாவட்டத்தில் 12 ஆயிரத்து 238 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜுலை முதல் கிழமையில் இருந்து ஓகஸ்ட் கடைசிக் கிழமை வரை சிறுபோக நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

சிறு போகத்திற்குரிய டீசலினை வாராந்தம் பகிர்ந்து வழங்குவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போது வரையான காலப்பகுதியில் 6040 ஏக்கருக்குரிய 61156.25 லீற்றர் டீசல் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள 08 கமநல சேவை நிலையங்களின் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மீதமாக உள்ள 6198 ஏக்கருக்குரிய டீசலை விரைவாக பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நுகேகொடை தனியார் பஸ்கள் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜுலை. 27

நுகேகொடயில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் தனியார் பஸ்கள் எரிபொருள் கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டன.

அதனடிப்படையில் 119, 117, 168, 176, 259, 689 மற்றும் 183 ஆகிய வீதிகளில் பயணிக்கும் தனியார் பஸ்களே இவ்வாறு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஓட்டோக்களுக்கு எரிபொருள் புதிய நடைமுறை அறிவிப்பு

கொழும்பு, ஜுலை. 27

ஓட்டோ சாரதிகள், தமது பிரதேசத்துக்கு பொறுப்பான பொலிஸ் நிலையத்தில் பதிவினை மேற்கொண்டு, எரிபொருள் பெறுவதற்கான ஒரு நிரப்பு நிலையமொன்றை ஒதுக்கிக்கொள்ளுமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோரியுள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றினூடாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில், எதிர்வரும் ஜுலை 31 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான பதிவை மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல், பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரமே எரிபொருள் பெற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் விவசாய உபகரணங்கள், மின்பிறப்பாக்கிகள் மற்றும் ஏனைய உபகரணங்களை பயன்படுத்துபவர்கள் அந்தந்த பிரதேச செயலகங்களில் பதிவு செய்ய முடியும்.

தங்களது வாராந்த எரிபொருள் தேவை தொடர்பான தகவல்களுடன் இவ்வாறு பதிவு செய்து ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஒதுக்கிக் கொள்ள முடியும்.

செஸி எனப்படும் அடிச்சட்ட இலக்கம் மூலம் கியூ.ஆர். முறைமையை பதிவு செய்ய முடியாத வாகன பயனர்கள், வெள்ளிக்கிழமை முதல் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி பதிவு செய்ய முடியும் என வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறியுள்ளார். (அ)

# 9 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட தங்கம் வலம்புரிச் சங்குடன் மூவர் மன்னாரில் கைது!

மன்னார், ஜுலை. 27

மன்னார் பேசாலை கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு கடற்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போது நாட்டிலிருந்து கடத்த முயன்ற சுமார் 470 கிராம் தங்கம் மற்றும் சங்கு (வலம்புரி) கைப்பற்றப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 03 சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேசாலை-தலைமன்னார் கடற்பரப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கடற்படையினர் விசேட ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது பேசாலை கடற்கரையில் இருந்து சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த படகு ஒன்றை பரிசோதித்தனர்.

அந்தப் படகில் இருந்து 470 கிராம் தங்கம் மற்றும் வலம்புரிச் சங்கு ஆகியவற்றை கடற்படையினர் மீட்டனர்.

குறித்த சம்பவத்துடன் ஈடுபட்ட 03 சந்தேக நபர்களையும், அந்த பொருட்களை கடத்தப் பயன்படுத்திய டிங்கிப் படகையும் கடற்படையினர் கைது செய்தனர்.

இதற்கிடையே இந்த நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட தங்கத்தின் சந்தை மதிப்பு ரூ. 9 மில்லியன் என கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 24 முதல் 39 வயதுக்குட்பட்ட புத்தளம் மற்றும் பேசாலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள், தங்கம், சங்கு மற்றும் படகுகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள சுங்க அலுவலகத்தில் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# நல்லூர் ஆலய வருடாந்த பெருவிழா ஏற்பாடுகள் குறித்து நேற்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜுலை. 27

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதனுடைய ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக யாழ் மாநகர சபையினால் விளக்கமளிக்கப்பட்டது.

மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்.மாநகர சபையில் இடம் பெற்றது.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு மற்றும் கொரோனா தொற்று காரணமாக கடந்த மூன்று வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்ற நல்லூர் மஹோற்சவம் வழமை போன்று அதாவது 2018 ஆம் ஆண்டுக்கு முன்பு எவ்வாறு உற்சவம் நடந்ததோ அதே போல இம்முறை இடம்பெறுமென யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவித்தார்.

கலந்துரையாடலுக்கு பின்னர் நல்லூர் ஆலயப் பெருந் திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஓகஸ்ட் முதலாம் திகதி காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு ஓகஸ்ட் 29 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.

ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எக்காரணம் கொண்டும் வாகனங்கள் உட் செல்ல முடியாது. அதே போல வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி காணொளி பதிவு செய்ய முடியாது. காலணிகளுடன் ஆலய வளாகத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

ஆலயத்துக்கு நேர்த்திக் கடன்களைக் கழிப்பதற்காக வருகின்ற தூக்குகாவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள் நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ் மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ் நகரை அடைய முடியும். ஆனால் இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின் போது கச்சேரி-நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும்.

முகக்கவசங்களை அணிவது சட்டமாக்கப்படவில்லை. இருந்த போதும் கொரோனா எச்சரிக்கை காணப்படுவதால் முகக்கவசங்களை அணிந்து தன்னெழுச்சியாக சுகாதார விதிமுறைகளை பக்தர்கள் பின்பற்றவேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் தங்களது சுகாதாரத்தில் கவனம் எடுத்து செயல்பட வேண்டும்.

திருட்டுச் சம்பவங்களை தவிர்க்க நல்லூர் ஆலயச் சூழலில் யாழ் மாநகர சபையினால் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ் மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர்,மாநகர அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ)



# சபை முதல்வராக சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, ஜுலை. 27

நாடாளுமன்றில் சபை முதல்வராக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை நியமிப்பதற்கு ஆளுங்கட்சி எம்.பிக்கள் தீர்மானித்துள்ளனர்.

சபை முதல்வராகச் செயற்பட்ட தினேஷ் குணவர்தன தற்போது பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் ஆளும் கட்சியில் இருந்து விலகி சுயாதீன உறுப்பினராக செயற்பட்ட சுசில் பிரேமஜயந்த கடந்த 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி வாக்கெடுப்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

# ரணிலின் சொந்த இல்லத்துக்கு தீ வைத்த 20 பேர் அடையாளம்!

கொழும்பு, ஜூலை. 27
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்திற்கு தீ வைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 20 பேரை இதுவரை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் அடையாளம் கண்டுள்ளனர்.

சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளிகள், புகைப்படங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காணொளிகள் ஊடாகவே இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வலுக்கட்டாயமாக இல்லத்துக்கு நுழைந்தவர்கள் மற்றும் இல்லத்திற்குள் நுழைய வழி வகுத்தவர்களே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவித்தன.

பொலிஸ் தலைமையகத்தினால் குறித்த சந்தேக நபர்கள் தொடர்பான தகவல்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், சந்தேக நபர்கள் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்களின் உதவியை நாடவுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவித்தன.

மேலும் சந்தேக நபர்களின் அடையாளத்தை வெளிப்படுத்தியதன் பின்னர், அவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் கடந்த 9ஆம் திகதி தீக்கிரையாக்கப்பட்டது.

தீ வைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் பிரதியமைச்சர் ஒருவரின் மகன் மறுநாள் டுபாய் சென்றுள்ளதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் டுபாயில் இருந்து இங்கிலாந்து சென்றுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

சந்தேக நபரை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு சர்வதேச பொலிஸாரின் உதவியையும் குற்றப் புலனாய்வு திணைக்களம் கோரியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)




# தமிழக அரசு வழங்கிய உதவி இலங்கை அரசிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூலை. 27
22 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான40,000 மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால்மா மற்றும் 100 மெற்றிக் தொன் மருந்துப் பொருட்கள் போன்ற மனிதாபிமான அடிப்படையில் தமிழக அரசு வழங்கிய பொருட்களை இந்திய தூதரகம் இலங்கை அரசிடம் கையளித்துள்ளது.

இந்த நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றதோடு, குறித்த பொருட்களை இந்திய தூதுவர் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். (அ)

# சாரதி அனுமதிப்பத்திர காலாவதி திகதி நீடிப்பு

கொழும்பு, ஜூலை. 27
அண்மைக் காலமாக வழங்கப்பட்ட தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களின் காலாவதித் திகதியை நீடிக்க நடவடிக்கை எடுப்பதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன உறுதியளித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

காலாவதித் திகதிகளை நீடிப்பதில் சில சட்ட சிக்கல்கள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

புதிய சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் உள்ள பிரச்னைகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவியபோது, தாங்கள் சில பிரச்னைகளை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பிட்ட நபர்களுக்கு தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சட்டத் தடைகளை நீக்குவதற்கான அமைச்சரவை பத்திரத்தை உருவாக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்தப் பிரச்னைக்கு விரைவில் தீர்வு காண்பதாகவும் அவர் உறுதியளித்தார். (அ)

# இன்று கூடுகின்றது பாராளுமன்றம் எம்.பியாக வஜீர சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஜூலை. 27
ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் வஜீர அபேவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராக இன்று சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார்.

பாராளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடவுள்ளது. இதன்போது அவர் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியான ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே வஜீர நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# குரங்கு அம்மை பரவும் அச்சுறுத்தல் எதுவுமில்லை

கொழும்பு, ஜூலை. 27
குரங்கு அம்மை நாட்டில் பரவும் பாரிய அச்சுறுத்தல் எதுவும் இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு சில நாடுகளில் மாத்திரமே குரங்கு அம்மை நோயின் பாதிப்புகள் பதிவாகியுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த குறிப்பிட்டார்.

நோய் பரவல் தொடர்பில் உலக நாடுகள் பூரண கவனம் செலுத்தியுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஆபத்து ஏற்படும் பட்சத்தில் இலங்கைக்கு தேவையான ஆதரவை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் வெளியிட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# ரயில் கட்டணங்களை 100 வீதத்தினால் அதிகரிப்பதில் முரண்பாடு கிடையாது

கொழும்பு, ஜூலை. 27
ரயில் பயண கட்டணங்களை 100 வீதத்தினால் அதிகரிப்பதில் எவ்வித முரண்பாடும் கிடையாது என ரயில் நிலைய அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன இதனைக் குறிப்பிட்டார்.

ரயில்வே திணைக்களத்தின் நட்டம் மற்றும் எரிபொருள் விலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இதனை ஏற்றுக் கொள்ள முடியும் என அவர் கூறினார்.

எனினும் சில ரயில் பயண கட்டண பிரிவுகள் 100 வீதத்துக்கு பதிலாக 200 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

மேலும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் பயணிகளினால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு மாதாந்த பருவச் சீட்டுகளின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறான நடவடிக்கைகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இவ்வாறு அதிக அளவில் ரயில் பயண கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டால் பயணிகள் ரயிலில் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கும் நிலை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கு தீர்வொன்றை முன்வைப்பார் என தான் நம்புவதாகவும் ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன கூறினார்.

மேலும் ரயில்வே திணைக்களத்தை தனியார் மயப்படுத்துவதற்கான தேவை கிடையாது எனவும் அதனை அரசாங்கமே தொடர்ந்து நடத்திச் செல்ல முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# திருமண ஆசை காட்டி ஆசிரியையிடம் மோசடி

கொழும்பு, ஜூலை. 27
பிபில-யல்கும்புர பிரதேசத்தில் வசிக்கும் ஆசிரியை ஒருவரிடம் இருந்து 23 இலட்சத்து 30,600 ரூபாவை மோசடி செய்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரை கைது செய்ய மொனராகலை பிரிவின் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

32 வயதான குறித்த ஆசிரியை பண்டாரவளை பிரதேசத்தில் வசிக்கும் தனியார் காப்புறுதி நிறுவனத்தின் முகாமையாளரை காதலித்துள்ளார்.

கார் வாங்குவது உள்ளிட்ட பல்வேறு தேவைகளை கூறி பல சந்தர்ப்பங்களில் 23 லட்சத்து 30 ஆயிரத்து 600 ரூபாவை காப்புறுதி நிறுவன முகாமையாளர் குறித்த ஆசிரியையிடம் இருந்து பெற்றுகொண்டுள்ளார்.

ஆசிரியைக்கு தெரிந்தே கடன் அட்டையை பயன்படுத்தி பல சந்தர்ப்பங்களில் பணம் பெற்று மோசடி செய்துள்ளார்.

காதலன் திருமணமான இரண்டு பிள்ளைகளின் தந்தை என்பதை அறிந்த ஆசிரியை சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த சம்பவம் தொடர்பில் மொனராகலை பிரிவின் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# இடைக்கால பட்ஜெட் ஓகஸ்ட்டில் முன்வைப்பு

கொழும்பு, ஜூலை. 27
"இடைக்கால வரவு - செலவுத் திட்டம் அடுத்த மாதத்துக்குள் முன்வைக்கப்படும்." - என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போதே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார். (அ)

# வஜிர அபேவர்தனவுக்கு முக்கிய அமைச்சு பதவி



கொழும்பு, ஜூலை. 27
ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தனவுக்கு சர்வகட்சி அரசாங்கத்தின் கீழ் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் காரணமாக வெற்றிடமான ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு வஜிர அபேவர்தனவை நியமித்து தேர்தல்கள் ஆணைக்குழு உரிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினராக அவர், இன்று சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார்.

இன்னும் இரு வாரங்களுக்குள் சர்வகட்சி அரசு அமையவுள்ளது, அதில் வஜீரவுக்கு அமைச்சு பதவி வழங்கப்படவுள்ளது. (அ)

## பிரித்தானிய பிரதமர் போட்டி:

# இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயரும்.. இங்கிலாந்தை ஆழப்போகும் இந்தியரும்..



ஜங்கரன் விக்கினேஸ்வரா

லண்டனில் போரிஸ் ஜான்சனுடனான பதவி வீழ்ச்சிக்கு பின்பு , முன்னாள் நிதியமைச்சர் ரிஷி சுனக் வேகமாக வளர்ந்து வருகிறார். இது பிரிட்டனின் முதல் ஆங்கிலேயர் அல்லாத, இந்திய வம்சாவழி பிரஜை பிரதமராகவும், அவர் பதவியேற்கும் சாத்தியமும் உள்ளது.

பிரிட்டன் பிரதமர் வேட்பாளராக போட்டியிட விரும்புவதாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் விருப்பம் தெரிவித்து அதற்கான பிரசாரத்தை தீவிரமாக தொடங்கியும் உள்ளார். பிரித்தானியாவில் கன்சர்வேடிவ் கட்சியின் தலைமைப்பதவி மற்றும் பிரதமர் பதவிக்கான போட்டி தற்போது தீவிரமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**போரிஸ் ஜான்சன் ராஜினாமா:**

பிரிட்டன் பிரதமராகப் பதவி வகித்து வந்த போரிஸ் ஜான்சன், அண்மையில் தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்து, கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகினார். அடுத்த கட்டமாக கன்சர்வேட்டிவ் கட்சி, கட்சியின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டியில் கட்சி எம்பிக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் இரண்டு பேர் தலைமைப் பொறுப்புக்குப் போட்டியிடுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டும் உள்ளது.

இந்நிலையில், பிரிட்டன் நிதி அமைச்சர் பதவியில் இருந்து விலகிய இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக், (42), பிரதமர் பதவியில் தாம் போட்டியிடப் போவதாக, அறிவித்து உள்ளார். மேலும், ரெடி பார் ரிஷி (Ready for Rishi) என்ற பிரசாரத்தையும் அவர் தொடங்கி இருக்கிறார்.

இறுதியாக இடம்பெற்ற தலைமைத்துவ வாக்கெடுப்பில் பென்னி மோர்டான்ட் வெளியேற்றப்பட்ட பின்னர், அடுத்த பிரதமருக்கான போட்டியில் லிஸ் ட்ரஸை முன்னாள் நிதி அமைச்சர் ரிஷி சுனக் எதிர் கொள்கின்றார்.

இந்தியா மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள பிரிட்டனின் பழைய காலனித்துவ நாடுகளில் இருந்து குடியேறியவர்களின் இந்திய வம்சாவளியினர் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரத்தின் கட்டுப்பாட்டை கொண்டதால் இது ஒரு வரலாற்று மைல்கல்லாக அமையும்.

கன்சவேட்டிவ் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே நடந்த இறுதி வாக்கெடுப்பில் லிஸ் ட்ரஸ், மோர்டான்ட்டின் குறுகிய முன்னிலையை முறியடித்து, 105க்கு 113 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளார்.

இறுதி வாக்கெடுப்பில் 137 வாக்குகளுடன் முதலிடத்தைப் பிடித்த சுனக்குடன் அவர் இப்போது நேருக்கு நேர் மோதவுள்ளார். கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்களிடையே வாக்கெடுப்பு மூலம் வெற்றியாளர் தீர்மானிக்கப்படுவார்.

2020 ஆம் ஆண்டில், 11 டவுனிங் தெருவில் உள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் முன் படிக்கட்டில் எண்ணெய் விளக்குகளை ஏற்றி இந்து பண்டிகையான தீபாவளியைக் கொண்டாடிய பெருமையை ரிஷி சுனக் பெறுகிறார்,

வடக்கு இங்கிலாந்தின் யார்க்ஷயரில் உள்ள ரிச்மண்ட் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், 2015 இல் அவர் முன்னாள் கட்சித் தலைவரும் வெளியுறவு செயலாளருமான வில்லியம் ஹேக்கிடம் இருந்து ஒரு பாதுகாப்பான கன்சர்வேடிவ் இருக்கையைப் பெற்றார். அத்துடன் சுனக் பகவத் கீதையின் மீது பாராளுமன்ற உறுப்பினராக விசுவாசப் பிரமாணம் செய்து கொண்டார் என்பதும் யாவரும் அறிந்ததே.

முன்னைய பிரதமர் தெரசா மே ஜனவரி 2018 இல் அவருக்கு அரசாங்கத்தில் தனது முதல் வேலையைக் கொடுத்தார், அவரை உள்ளூர் அரசாங்கம், பூங்காக்கள் மற்றும் பிரச்சனைக்குரிய குடும்பங்களுக்கு இளைய அமைச்சராக்கினார்.

போரிஸ் ஜான்சனுக்கு எதிராக சர்ச்சைகள் வெடித்தபோது, ரிஷி சுனக் தனது அரசுப் பதவியிலிருந்து விலகியதன் காரணமாகவே, போரிஸ் ஜான்சன் அமைச்சரவையிலிருந்து மேலும் சிலர் தங்கள் பதவியை ராஜினாமா செய்ய நேர்ந்ததாகவும், இதன் காரணமாகவே போரிஸ் ஜான்சன் பிரதமர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய நெருக்கடி ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

> போரிஸ் ஜான்சனுக்கு எதிராக சர்ச்சைகள் வெடித்தபோது, ரிஷி சுனக் தனது அரசுப் பதவியிலிருந்து விலகியதன் காரணமாகவே, போரிஸ் ஜான்சன் அமைச்சரவையிலிருந்து மேலும் சிலர் தங்கள் பதவியை ராஜினாமா செய்ய நேர்ந்ததாகவும், இதன் காரணமாகவே போரிஸ் ஜான்சன் பிரதமர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டிய நெருக்கடி ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.



**யார் இந்த ரிஷி சுனக்?**

ரிஷி சுனக்கின் தாத்தா, பாட்டி பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். 1960 களில் கிழக்கு ஆப்பிரிக்காவில் இருந்து பிரிட்டனுக்கு குடிபெயர்ந்தனர். மேலும் ரிஷி சுனக், இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் இணை நிறுவனர் என்.ஆர்.நாராயண மூர்த்தியின் மருமகனும் ஆவார். இவருக்கு இரண்டு மகள்கள் உள்ளனர்.

அவரது தந்தை தெற்கு ஆங்கிலக் கடற்கரையில் உள்ள சவுத்தாம்ப்டனில் குடும்ப மருத்துவராக இருந்தார், மேலும் அவரது தாயார் உள்ளூர் மருந்தகத்தை நடத்தி வந்தார்.

ஆக்ஸ்போர்டு மற்றும் பின்னர் கலிபோர்னியாவில் உள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் கற்று முன்னேறும் காலத்தில் சுனக் உள்ளூார் இந்திய உணவகத்தில் வேலை செய்தார்.

தேர்தல் தொடர்பாக, ரிஷி சுனக் வெளியிட்டுள்ள வீடியோவில் பேசி இருப்பதாவது: யாராவது இந்த தருணத்தில் சரியான முடிவு களை எடுக்க வேண்டும். அதனால் தான் கன்சர்வேட்டிவ் கட்சியின் அடுத்த தலைவராகவும், பிரிட்டனின் பிரதமர் வேட்பாளராகவும் நான் நிற்கிறேன். அதுமட்டுமல்லா மல், பிரிட்டனின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும், நாட்டை மீண்டும் ஒருங்கிணைப்பதற்கும் சரியான தருணம் இது தான் என அவர் கூறியுள்ளார்.

பிரிட்டன் பிரதமருக்கான போட்டியில் ரிஷி சுனக் வெற்றி பெற்று விட்டால் முதல் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த ஒருவர் அந்த நாட்டின் உயர் பதவியில் அமரும் பெருமையை பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு



# அன்று இராணுவ உடைக்கு இருந்த மரியாதை தற்போது இல்லை!

## ஜூலை 9 இல் சீருடைய கழற்றிய இராணுவ வீரர்

அன்று இராணுவ உடைக்கு இருந்த மரியாதை தற்போது இல்லை என்று ஜூலை 9 இல் சீருடைய கழற்றி எறிந்து விட்டு மக்களுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்ட சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த அசேல சஞ்சீவ பாலசூரிய தெரிவித்துள்ளார்.

ஜூலை 9 ஆம் திகதி, நாடு தழுவிய போராட்டங்களின் போது பல பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் பொதுமக்களின் பக்கம் நின்று தங்கள் கடமைகளை ஓரங்கட்டுவதாக செய்திகள் வெளிவந்தன. இளம் இராணுவ வீரர் ஒருவர் தனது சீருடையை கழற்றி மக்களுடன் இணைந்து போராட்டத்தில் குதித்த காணொலி ஒன்று சமூக வலைதளங்களில் பரவி வந்தது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் இணைந்த பின்னர் அவரின் வாழ்க்கை எவ்வாறு செல்கின்றது என்று அறிந்து கொள்வதற்காக சிங்கள நாளிதழ் ஒன்று அவருடன் தொடர்பு கொண்டு எடுத்த நேர்காணலின் முக்கிய பகுதிகளை உங்களுக்கு தருகின்றோம்.

“குருநாகலை பிறப்பிடமாகக் கொண்ட நான் சிறப்பு அதிரடிப்படையில் பணியாற்றி வந்தேன். எனது பெயர் அசேல சஞ்சீவ பாலசூரிய. வயது 24. நாட்டுக்கு சேவை செய்ய இராணுவத்தில் இணைந்தேன். சிறு வயதில் இருந்தே நான் கண்ட கனவு இது. மருதானை இராணுவத் தலைமையகத்தில் பணியாற்றினேன்.

**உண்மையில் அன்று நடந்தது என்ன?**

முதல் நாளே ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கொழும்புக்கு வருவார்கள் என்று கூறப்பட்டது. அதனால், நாட்டின் பாதுகாப்பு கருதி, 8 ஆம் திகதி தொடக்கம் இலங்கை வங்கி வீதியில் பாதுகாப்பு பணிக்காக நிறுத்தப்பட்டேன். 9 ஆம் திகதி காலையில இருந்தே மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. வயதான தாய்மார்கள், அப்பாக்கள், எங்களைப் போன்ற இளைஞர்கள் தங்களின் துயரங்களைச் சொல்லி அழத் தொடங்கினார்கள். அதனால் அவர்கள் பக்கம் நான் நிற்க வேண்டும் என்று அப்போது உணர்ந்தேன். அதனால் தான் இராணுவ சீருடையை கழற்றி எறிந்து விட்டு அவர்களுடன் இணைந்தேன்.

**உங்களை அங்குள்ள மக்கள் தம்முடன் இணையுமாறு கட்டாயப்படுத்தினார்களா?**

இல்லை, அந்த நேரத்தில் என் இதயம் உணர்ந்ததை நான் நேர்மையாக செய்தேன். இது யாருடைய ஆலோசனையிலோ அல்லது தூண்டுதலிலோ செய்யப்படவில்லை. இந்த நாட்டில் உள்ள அப்பாவி மக்களின் வரிப் பணத்தில் வாழ்கின்றோம். நாட்டைக் காக்க இராணுவத்தில் இணைந்தேன். அநியாயங்கள் நடக்கும் போது கண்ணை மூடிக்கொண்டு இருப்பது எமது நாட்டுக்கும் மக்களுக்கும் கடினம். நாங்களும் இந்த நாட்டின் பொதுமக்கள் தான். அதனால்தான் நான் அவர்களுக்கு ஆதரவாக நின்றேன்.

**சீருடையை கழற்றிய பின்னர் அந்த நேரத்தில் அங்கு என்ன நடந்தது?**

கூட்டம் வெகுநேரம் என்னைச் சூழ்ந்து கொண்டது. சிலர் என்னைக் கட்டிப்பிடித்து அழுதார்கள்.



**இந்த சம்பவத்தின் காணொலியும் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டதா?**

ஆம். அதனைப் பார்த்துவிட்டு பலர் எனது இலக்கத்தினை கண்டு பிடித்து அழைத்தார்கள். உண்மையில் அன்று பல அழைப்புகள் வந்ததால் என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

**அவ்வாறு செய்ததால் வேலை போய் விடுமோ என்று நீங்கள் அச்சப்படவில்லையா?**

அந்த நேரத்தில் எனது சீருடையை கழற்றினேன், எதனையும் எதிர்கொள்ள தயாராகவே இருந்தேன்.

**பின்னர் இராணுவத் தளபதிகள் உங்களை அழைத்து குற்றம் சாட்டினார்களா?**

இல்லை. பலர் தொலைபேசியில் அழைத்து விபரம் கேட்டனர். ஆனால் யாரும் என்னை குறை சொல்லவில்லை.

**தற்போது நீங்கள் இராணுவத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளீர்கள். இல்லையா?**

ஜூலை 9 சம்பவத்துக்கு மறுநாள் நான் எனது நண்பனுடன் சென்று எனது சீருடைகளை இராணுவத் தலைமையகத்தில் ஒப்படைத்துவிட்டு வீட்டுக்குச் சென்றேன். சம்பவம் நடந்த அதே நாளில் இருந்து நான் பணியில் இருந்து நீக்கப்பட்டதாக ஒரு கடிதம் வீட்டிற்கு வந்தது. எனது ஊதியமும் நிறுத்தப்பட்டது.

**இது தொடர்பாக உங்கள் குடும்பத்தினர் என்ன சொன்னார்கள்?**

எனது அம்மா, அப்பா மற்றும் சகோதரி வீட்டில் உள்ளனர். நான் செய்ததை நினைத்து எனது குடும்ப உறுப்பினர்கள் பெருமைப்படு கிறார்கள். ஆனால், வேலையை இழந்ததால் கொஞ்சம் வருத்தம்தான்.

**உங்களை திடீரென வேலையை விட்டு நீக்கியதால் வீட்டுப் பொருளாதாரத்தை பாதிக்கவில்லையா?**

தந்தையும் தொழில் புரிகின்றார். அவ்வாறு கூறுவதனால் எங்களிடம் அதிக பணம் இருப்பதாக எண்ண வேண்டாம். அதேபோன்று சேமிப்பு பணமும் எம்மிடம் எதுவும் இல்லை. ஆனாலும், இந்த வேலை பறி போனாலும் வீட்டில் பொருளாதாரத்துக்கு பிரச்சனை வராது என்று நினைக்கின் றேன். ஏனென்றால் என்னால் வேறு வேலை செய்ய முடியாது. முன்னொரு காலத்தில் எமது மக்கள் இராணுவத்தை தெய்வத்துக்கு சமமாக நடத்தினார்கள். ஆனால், தற்போது அந்த நிலை மாறிவிட்டது.

**இந்த வித்தியாசத்தை உணர்கின்றீர்களா?**

கண்டிப்பாக. சிறுவயதில், இராணுவத்தில் உள்ள யாராவது ஒருவர் வீதியில் நடந்து சென்றால் எமது உள்ளம் மலரும். அந்த மரியாதை எமக்கும் நடைபெற்றது. பலர் எங்களைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், தற்போது மக்களுக்கு விரக்தி மட்டுமே உள்ளது என்பதை மக்களின் எதிர்வினைகளில் இருந்து உணர்ந்து கொண்டேன்.

**எடுத்த முடிவை நினைத்து தற்போது வருத்தப்படுகின்றீர்களா?**

இல்லை. வருத்தமும் இல்லை. இரா ணுவ சிறப்பு அதிரடிப்படை மிகவும் சிறப்பு வாய்ந்தது. அந்த பயிற்சிக்காக பல மாதங்கள் கஷ்டப்பட்டேன். அதனால், அன்புடன் உடுத்திய உடை கள் துன்பப்பட்டுப் போய்விட்டதே என்ற வருத்தம் கொஞ்சம் உண்டு. ஆனால், எனது மக்களுக்காகத்தான் அப்படிச் செய்தேன் என்று நினைக்கும் போது அந்த வருத்தமும் காணாமல் போய் விடுகின்றது.

**மீண்டும் அந்த சீருடையை அணிய வாய்ப்பு கிடைத்தால், அதை ஏற்றுக் கொள்வீர்களா?**

ஆம். எப்போதாவது ஒரு போர் நடந்தால், நான் நிச்சயமாக நாட்டுக்காக மீண்டும் போரில் ஈடுபடுவேன்.


9 ஆம் திகதி காலையில இருந்தே மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. வயதான தாய்மார்கள், அப்பாக்கள், எங்களைப் போன்ற இளைஞர்கள் தங்களின் துயரங்களைச் சொல்லி அழத் தொடங்கினார்கள். அதனால் அவர்கள் பக்கம் நான் நிற்க வேண்டும் என்று அப்போது உணர்ந்தேன். அதனால் தான் இராணுவ சீருடையை கழற்றி எறிந்து விட்டு அவர்களுடன் இணைந்தேன்.



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, ............., ........... ii) 18, 15, 12, ............., ...........

**21)** 3, 9, 14, 6, 10, 12, — பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..........................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.............................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3$l$ 300$ml$ பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

......................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ....................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

....................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டி எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8 **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130 2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745 **23.** 455
**24.** 1l 100ml / 1100ml **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30 **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1 **31.** 2 **32.** 3
**33.** 2 **34.** 3 **35.** 2

### கல்வி tv CHANNEL-1 — 27.07.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 27.07.2022 புதன்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# நாட்டை ஆள்வதற்கு தகுதியற்றவர் ரணில்

## அரச பொது ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

அம்பாறை, ஜூலை.27

**நாட்டை ஆள ரணில் விக்கிரமசிங்க தகுதி அற்றவர், அவர் உடனடியாக பதவி விலகவேண்டும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.**

சங்கத்தின் கல்முனை தலைமையகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில்- அமைதி வழியில் கலைந்து செல்வதற்கு தயாராக இருந்த போராட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை எல்லோருடனும் சேர்ந்து நாமும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

முப்படையினருக்கு திட்டமிட்ட வகையில் கூடுதல் அதிகாரம், அனுமதி ஆகியவற்றை வழங்கி, போராட்டக்காரர்கள் மீது அடக்கு முறையை பிரயோகித்த ரணில் விக்கிரமசிங்க உடனடியாக ஜனாதிபதி பதவியைத் துறக்க வேண்டும்.

நிராயுதபாணிகளான போராட்டக்காரர்கள் மாத்திரம் அன்றி உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக வியலாளர்களும் படையினரின் பேயாட்டத்துக்கு உட்பட்டு பாரதூரமாக பாதிக்கப்பட நேர்ந்தது.

நாட்டின் தலைவர் என்கிற வகையிலும், பாது காப்பு அமைச்சர் என்கிற வகையிலும் இம் மிலேச் சத்தனமான தாக்குதலுக்கான தார்மீக பொறுப்பை ரணில் விக்கிரமசிங்க ஏற்று, பதவி விலக தவறி னால் அவருக்கு எதிரான போராட்டம் தொட ரும்.

கோட்டாவுக்கு ஏற்பட்ட நிர்க்கதிதான் ரணி லுக்கும் நேரும் என்பது திண்ணம்- என்றார். (அ)

# கிண்ணியா பிரதேசத்தின் ஆசிரியர்கள் போராட்டம்

மட்டக்களப்பு, ஜூலை.27

எரிபொருள் கோரி, கிண் ணியா பிரதேச அதிபர் மற்றும் ஆசிரியர்கள், நேற்று முன்தினம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட் டனர்.

இதனால், கிண்ணியா கல்வி வலயத்தில் உள்ள 66 பாடசாலைகளும் இயங்க வில்லை.

இது தொடர்பாக, கிண் ணியா அதிபர்கள் சங்கத் தலை வர் எம்.எம். எம். முஸம்மில் தெரிவிக்கையில், “அதிபர் மற்றும் ஆசிரியர்கள் எரி பொருள் பெற்றுக்கொள்வ தற்கு பொருத்தமான உரிய ஏற்பாடுகளை செய்து தரு மாறு, பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு பலமுறை கோரிக்கை விடுத்திருந்தோம்.

அத்துடன், கவனயீர்ப்புப் போராட்டங்களையும் நடத்தியிருந்தோம். எனினும், இது தொடர்பாக எந்தவொரு சாதகமான முன்னெடுப்புக் களும் மேற்கொள்ளப்பட வில்லை.

கிண்ணியா பிரதேசத்தில் அதிபர், ஆசிரியர்கள் தொடர்ந்து, எரிபொருள் நிலையங்களில் அவமானப் படுத்தப்பட்டு வருகின்றார்கள். எனவே, கல்வி அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத் தப்பட வேண்டும். இல்லை யென்றால், அதிபர், ஆசிரியர் கள் எரிபொருட்களைப் பெற் றுக் கொள்வதற்கு பிரத்தியேக வசதிகளை செய்து தர வேண் டும்-என்றார்.

அத்துடன், பாடசாலைக்கு அண்மையில் உள்ள ஆசிரியர் கள் சுகவீன லீவு பெற்றிருக்கி றார்கள். இது அதிபர் சங்க கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# சிறுபோக வேளாண்மைக்கு முன்னுரிமையில் எரிபொருள்

மட்டக்களப்பு, ஜூலை 27

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சிறுபோக வேளாண்மை அறுவடை மேற்கொள்வதற்கு ஏது வாக அறுவடை இயந்திரங்களுக்கும், அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொண்டு செல்வதற் கான உழவு இயந்திரங்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப் பட்டு வருகின்றது.

அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை கம நல சேவை நிலையத்துக்குட்பட்ட சுமார் 07 ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகளில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை அறுவடை செய்வ தற்கு தயார் நிலையில் உள்ளதாக கமநல அபிவி ருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.அஸ்ரப் தெரிவித்தார்.

எனவே, அம்பாறை மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸின் அறிவுறுத்தலுக்கமைய, பிராந்திய விவசாயிகளுக்கு எரிபொருள் பங் கீட்டு அட்டை மூலம் எரிபொருள் விநியோ கிக்கப்பட்டு வருவகின்றது.

எரிபொருள் தட்டுப்பாடு இல்லாமல் நெல் அறுவடை சீராக நடைபெற வேண்டுமென்ப தற்காக சகல விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 20 லீட்டர் டீசல் கிரமமான முறையில் வழங்குவ தற்கு எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்க ளுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களுக்கு கமநல சேவை மத்திய நிலையத்தினூடாக வழங்கப்பட்டுள்ள எரிபெருள் பங்கீட்டு அட்டையுடன் உரிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருட் களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட் டுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகின்ற போதிலும் வேளாண்மை அறுவடை செய்வதற்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வகையில் விவசாயிகளுக்கு எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# மண்முனை, காத்தான்குடியில் சமையல் எரிவாயு விநியோகம்



மட்டக்களப்பு, ஜூலை. 27

மண்முனை வடக்கு, காத் தான்குடி பிரதேச செயலக பிரி வுகளில் நேற்று முன் தினம் சமையல் எரிவாயு சிலிண்டர் கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் க. கருணாகரனின் ஆலோசனைக்கு அமைவாக, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ. வாசுதேவன் மற்றும் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதய ஸ்ரீதரன் ஆகியோரின் நேரடிக் கண்கா ணிப்பின் கீழ், எரிவாயு வழங்கப்பட்டது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் 1,000 சிலிண் டர்கள் பைனியர் வீதியில் வழங் கப்பட்டதுடன், காத்தான்குடி பிரதேச செயலக பிரிவில் 4 பகுதிகளில் தலா 300 சிலிண் டர்கள் வீதம் மொத்தமாக 1,200 சிலிண்டர்கள் குடும்ப அட்டையின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு, சுமுக மாக வழங்கப்பட்டன. (அ)

# பௌத்த மதகுருமாருக்கு வழங்கும் முக்கியத்துவம் ஏனைய மதகுருமார்களுக்கும் வழங்கப்படவேண்டும்!

## கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியம் வலியுறுத்து

மட்டக்களப்பு, ஜூலை 27

இலங்கையில் பௌத்த மதகுருமா ருக்கு வழங்கும் முக்கியத்துவத்தினை ஏனைய மதகுருமார்களுக்கும் வழங்கப் படவேண்டும் என கிழக்கிலங்கை இந் துக்குருமார் ஒன்றியம் வலியுறுத்தியுள் ளது.

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலான ஊடக சந்திப்பு நேற்று மட்டக்களப்பு மஞ்சந் தொடுவாயில் உள்ள அதன் அலுவல கத்தில் நடைபெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் கிழக்கி லங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ கணேச.லோகநாதன் குருக்கள்,செயலாளர் சிவஸ்ரீ .சி.குகநாத குருக்கள் ஆகியோர் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தனர்.

கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத் செயலாளர் சிவஸ்ரீ சி.குகநாத குருக்கள் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டவை வருமாறு:-

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் பெறுவதற்காக குருமார் செல் லும் போது, அங்கே குருமார்கள் புறக் கணிக்கப்படுவதும், சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்படுவதுமான செயற்பாடுகளால் இந்துக் குருமார் எரிபொருளைப் பெறா மலேயே வீடு செல்லும் நிலையே காணப்படுகிறது.

இதனை மட் டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்துக்கு கடந்த மாதம் எமது ஒன் றியத்தால் பல கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றினைக் கையளித்திருந் தோம்.

இதன்போது மேலதிக அரசாங்க அதி பரால் நாட்டிற்கு எரிபொருள் வருகின்ற போது, உங்களுக்குத் தேவையான எரிபொ ருளை வழங்குவதற்கு குறிப்பிட்ட எரி பொருள் நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவோம் என்ற உறுதி மொழி வழங்கப்பட்டது.

தற்போது அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் போதியளவு எரிபொருள் வந்து கொண் டிருக்கிறது. அதனை மக்களும் தங்களது வாகன இலக்கத் தகட்டின் கடைசி இலக்கத் துக்கமைய பெற்றுக் கொண்டிருக்கி றார்கள். இதன்போது பல முறைகேடு களும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் இந்துக் குருமார்கள் தமது பூசைக் கடமைகளுக்காகவும், சமூக மேம்பாட்டுக்காகவுமே எரி பொருளைப் பெற செல்கிறோம். மத வழிபாட்டினை முன்னின்று நிகழ்த்த அனைவரும் முன்வருவதில்லை.

ஒரு சிலரே முன்வருகின்றனர். எனவே அவர்கள் அக்கடமைகளைச் செவ்வனே நிகழ்த்த சமூகத்திலுள்ளவர் கள் உறுதுணையாகச் செயற்பட வேண டும். அத்தோடு எரிபொருள் நிரப்பு நிலை யத்தில் பணிபுரியும் பொலிசாரும் இடை யூறாகச் செயற்படுகின்றனர். இவற்றோடு பௌத்த குரு மார்களுக்கு வழங்கப் படும் உன்னதமான நிலை ஏனைய மதக் குருமார்களுக்கு வழங்கப்படுவதில்லை.

இனிவரும் காலங்களில் எமக்கான எரிபொருளை வழங்க இந்நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அரச அதிகாரிகள் சம்பந்தப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குப் பணிப்புரை வழங்க வேண்டும். அவ்வாறு செய்யாதபட்சத் தில் நாம் நீதி கோரி வீதிக்கிறங்க வேண் டிய துர்ப்பாக்கிய நிலையேற்படுமென்றார்.

கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ கணேச லோகநாதக் குருக்கள் கருத்துத் தெரி விக்கையில் குறிப்பிட்டவை வருமாறு:-

கொரோனாத் தொற்று காலத்தில் இந்துக் குருமார்கள் பல்வேறு இன்னல் களுக்கு மத்தியில் ஆலய பூசை வழிபாடு களை உரிய வகையில் நிகழ்த்தினர். இந்நிலையில் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பூசை வழிபாடுகளை நிகழ்த்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் எரிபொ ருள் நிரப்பச் செல்கையில் பல்வேறு இடர்கள், இன் னல்கள் மற்றும் கசப்பான சம்பவங்களை எதிர்கொள் கின்றனர். எரிபொருள் நிலை யங்களில் சமூகத்திலுள்ள ஏனையோர் போன்று வரிசையில் நின்று எரிபொருள் பெற முடியாது. ஏனெனில் காலை, மதி யம், பிற்பகல் பூசை வழிபாடுகளை நிகழ்த்த செல்ல வேண்டியுள்ளது. ஒரு குருவான வர் ஐந்து, ஆறு ஆலயங்களுக்குச் சென்று பூசை செய்ய வேண்டியுள்ளது.

இந்நிலையில் எரிபொருள் உரிய வேளையில் கிடைக்காத பட்சத்தில் பூசை வழிபாடுகளை உரிய காலவேளை யில் நிகழ்த்த முடியாமல் போய் விடும். இதனால் தெய்வக் குற்றத்துக்கு ஆளாக வேண்டியேற்படும்.

மதத்தை இழிவுபடுத்தும் செயற்பாடு களில் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் ஈடுபடுகின்றார். இதனை நாம் வன்மை யாகக் கண்டிக்கிறோம். இத்தகையோ ருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.அவ்வாறு எடுக்காவிட்டால் சிறைச்சாலைக்க முன்பாக ஆர்ப்பாட் டம் முன்னெடுக்கப்படும்-என்றார். (அ)

# உக்ரைன் ஜனாதிபதியை அகற்றுவதே எம் இலக்கு!

## ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு





கெய்ரோ, ஜூலை. 27

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை ஆட்சியிலிருந்து அகற்றுவதே ரஷ்யாவின் முக்கிய இலக்கு என ரஷ்ய வெளியுறவு அமைச்சார் செர்கேய் லாவ்ரோவ் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் கருங்கடல் துறைமுகங்களில் இருந்து தானிய ஏற்றுமதியை மீண்டும் தொடங்குவதற்கான ஒப்பந்தத்தில் ஐ.நா. மற்றும் துருக்கியின் மத்தியஸ்தத்துடன் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ள நிலையில் செர்கேய் லாவ்ரோவ் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். இந்த ஒப்பந்தம் உலக உணவுப் பற்றாக்குறையை குறைக்க உதவும் என நம்பப்படுகிறது.

கெய்ரோவில் அரபு லீக் உச்சிமாநாட்டில் தூதர்களிடம் பேசிய லாவ்ரோவ், முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத இந்த ஆட்சியின் சுமையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள உக்ரேனியர்களுக்கு உதவ மொஸ்கோ உறுதியாக இருப்பதாக கூறினார்.

இரு நாடுகளுக்கு இடையேயான பகையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பேச்சுவார்த்தை நடத்த கடந்த மார்ச்சில் ரஷ்யா தயாராக இருந்தது. ஆனால், மேற்கத்திய நாடுகள் உக்ரைனை பேச்சுவார்த்தை நடத்த விடவில்லை எனவும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, கடந்த பெப்ரவரி இறுதியில் போர் தொடங்கிய போது, உக்ரைன் அரசை அகற்றும் எண்ணம் இல்லை என ரஷ்ய அதிகாரிகள் கூறி வந்தனர். அதற்கு முரணாக இப்போது ரஷ்ய வெளியுறவு அமைச்சரின் கூற்று அமைந்துள்ளது.

இதற்கிடையே, ரஷ்யா நடத்திய தாக்குதலில் நேற்று வரையான கடந்த 24 மணி நேரத்தில் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டதாகவும், 10 பேர் காயமடைந்ததாகவும் உக்ரைன் ஜனாதிபதி மாளிகை நேற்று முன்தினம் தெரிவித்தது.(அ)

# பிரிட்டிஷ் கொலம்பியாவில் துப்பாக்கி சூட்டில் மூவர் பலி

ஒட்டாவா, ஜூலை. 27


கனேடிய மாகாணமான பிரிட்டிஷ் கொலம்பியாவில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டதுடன், இவர்களைச் சுட்டுக் கொன்றதாக சந்தேகிக்கப்படும் ஆயுததாரி ஒருவரும் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் மேலும் இருவர் காயமடைந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வான்கூவர் புறநகர்ப் பகுதியான லாங்லி நகரில் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றது.

துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சந்தேகிக்கப்படும் நபர் பொலிஸாரால் சம்பவ இடத்திலேயே சுட்டுக் கொல்லப் பட்டார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் யார்? அவர் தனியாளாகச் செயற்பட்டாரா? அல்லது பின்னணியில் எதும் குழுக்கள் உள்ளனவா? என்பது குறித்து விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இத்தாக்குதலால் பொது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என பிராந்திய பொலிஸ் தலைமை கண்கா ணிப்பாளர் காலிப் பயானி கூறினார்.




துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மற்றும் பலியானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும் அவர்களின் அடையாளங்களை பொலிஸார் பகிரங்கப்படுத்தவில்லை.

கனடாவின் மிக மோசமான துப்பாக்கி வன்முறை ஒன்று கடந்த 2020 இல் நடந்தது. போலியான பொலிஸ் கார் போன்ற ஒன்றில் சென்ற துப்பாக்கிதாரி 13 பேரை சுட் டுக் கொன்றார். இதில் மேலும் 09 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

தாய்வான் விவகாரத்தில்

# சீனா - அமெரிக்கா இடையே முற்றுகிறது மோதல் போக்கு!



பீஜிங், ஜூலை. 27

அமெரிக்க பாராளுமன்ற அவைத் தலைவர் நான்சி பெலோசியின் உத்தேச தாய்வான் பயணத் திட்டத்திற்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

நான்சி பெலோசியின் தாயவானுக்கான பணத்தை தொடர அமெரிக்கா வலியுறுத்தினால் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்க உறுதியான மற்றும் வலுவான நடவடிக்கைகளை சீனா எடுக்கும் என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பீஜிங்கில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது கூறினார்.

பெலோசியின் தைவானுக்கான உத்தேச பயணத்திற்கு எங்களின் உறுதியான எதிர்ப்பை அமெரிக்கத் தரப்பிற்கு பலமுறை சீனா தெளிவு படுத்தியுள்ளது.

அதை மீறி பெலோசி தாய்வான் பயணம் செய்தால் அதனால் ஏற்படும் கடுமையான விளைவுகளுக்கு அமெரிக்கா முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் தெரிவித்தார்.

இதற்கிடையே சீனாவுடனான பதற்றங்களுக்கு மத்தியில் தாய்வான் நேற்று முன் தினம் திங்கட்கிழமை தீவிர இராணுவப் மற்றும் கடற்படை பயிற்சியில் ஈடுபட்டது.

தாய்வான் தலைநகர் தைபேயில் போர் விமானங்கள் பறந்து பயிற்சியில் ஈடுபட்டன. தரைப்படை, கடற்படை பயிற்சியும் நடத்தப்பட்டது. இது ஆண்டுதோறும் நடைபெறும் வழக்கமான பயிற்சிதான் என தாய்வான் தெரிவித்தாலும், சீனாவின் எச்சரிக்கையை தொடர்ந்தே இந்தப் பயிற்சி நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாகவே சீன இராணுவ விமானங்கள் தைவான் வான் எல்லை அருகே அடிக்கடி பறந்து அச்சுறுத்துகின்றன. அண்மையில் ரஷ்யா - உக்ரைன் இடையே ஏற்பட்டுள்ள போர் போன்று, கிழக்கு ஆசியாவிலும் ஏற்படலாம். இவை அனைத்தும் நாங்கள் விழிப்புடன் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன என தைபே மேயர் கோ வென்-ஜே செய்தியாளர்களிடம் கூறினார்.

தாய்வானை தனது நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி என சீனா கூறி வருகிறது. அந்த நாட்டின் சுதந்திரம் அல்லது அங்கீகாரம் குறித்து எந்த நாடு பேசினாலும் அதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

எனினும் தாய்வான் எந்த நாட்டின் பகுதியும் இல்லை. நாங்கள் சுதந்திர அரசு என தாய்வான் தொடர்ந்து கூறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கனடா பழங்குடியின மக்களிடம் மன்னிப்பு கோரினார் பாப்பரசர்!



ஒட்டாவா, ஜூலை. 27

கனடாவில் கத்தோலிக்க திருச்சபைகளால் நடத்தப்பட்ட குடியிருப்பு பள்ளிகளில் பழங்குடியின சிறுவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக பாப்பரசர் பிரான்சிஸ் மன்னிப்பு கோரினார்.

கனடாவின் எட்மண்டன் அருகே உள்ள மாஸ்க்வாசிஸ் - செவன் சோரோஸ் கத்தோலிக்க தேவாலயத்தில் கூடியிருந்த சுமார் 2,000 வரையான பழங்குடி சமூகத்தினர் மத்தியில் பாப்பரசர் மன்னிப்பு கோரினார்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் 6 நாட்கள் பயணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கனடா சென்றடைந்தார்.

கனடா வந்திறங்கிய அவரை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஆளுநர் நாயகம் மேரி சைமன், பழங்குடி மக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

கனடாவில் குடியிருப்புப் பள்ளிகளில் பழங்குடியின குழந்தைகள் அனுபவித்த துஷ்பிரயோகங்களுக்காக ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் சார்பாக பகிரங்க மன்னிப்பு கோருவதே பாப்பரசர் பிரான்சிலின் இந்தப் பயணத்தின் நோக்கமாக இருந்தது.

கனடாவில் பல தசாப்தங்களாக நீடித்த குடியிருப்பு பள்ளி முறைமையின் கீழ் கலாசார இனப்படுகொலை இடம்பெற்றதாக 2015 ஆம் ஆண்டில், கனடாவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிவித்தது.

1870 முதல் 1990 களுக்கும் இடையில், 150,000 -க்கும் மேற்பட்ட பழங்குடி குழந்தைகள் குடியிருப்புப் பள்ளிகளில் இணைய கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்தப் பள்ளிகள் தேவாலயங்களால் நடத்தப்பட்டன. பழங்குடி குழந்தைகளை வெள்ளை கனேடிய சமுதாயத்தில் வலுக்கட்டாயமாக இணைப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாறான பள்ளிகள் செயற்பட்டன.

குழந்தைகள் தங்கள் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு, பழங்குடியின மக்களின் மொழிகளைப் பேச முடியாது தடை ஏற்படுத்தப்பட்டது. மேலும் இங்கு இணைக்கப்பட்ட குழந்தைகள் பலவிதமான உடல், உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு முகம் கொடுத்தனர்.

கனடாவின் முன்னாள் குடியிருப்பு பள்ளி வளாகங்களில் ஆயிரக்கணக்கான பழங்குடிச் சிறுவர்களின் எச்சங்கள் கண்டறியப்பட்டன. இது இந்த விவகாரத்தில் சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இந்த அநீதிகள் தொடர்பில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் மன்னிப்பு கோர வேண்டும் என்ற கோரிக்கைகள் கனடாவில் வலுவடைந்து வந்தன.

இந்த விவகாரத்தில் பாப்பரசர் மன்னிப்புக் கோரவேண்டும் என கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவும் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையிலேயே கனடாவில் கத்தோலிக்க திருச்சபைகளால் நடத்தப்பட்ட குடியிருப்பு பள்ளிகளில் பழங்குடியின சிறுவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக கனடா சென்றுள்ள பாப்பரசர் பிரான்சிஸ் பகிரங்க மன்னிப்பு கோரினார்.

கனடாவின் எட்மண்டன் அருகே உள்ள மாஸ்க்வாசிஸ் - செவன் சோரோஸ் கத்தோலிக்க தேவாலயத்தில் கூடியிருந்த சுமார் 2,000 வரையான பழங்குடி சமூகத்தினர் மத்தியில் கனடாவின் தவறான குடியிருப்புப் பள்ளி அமைப்பில் கத்தோலிக்க தேவாலயத்தின் பங்கிற்காக ஆழமாக வருந்துகிறேன் என்று பாப்பரசர் பிரான்சிஸ் கூறியபோது, அங்கிருந்தவர்கள் உணர்ச்சிப் பெருக்கில் கண்ணீர் வடித்தனர். (அ)

ஈழநாடு






## ஹோப் தனித்துவ சாதனை!

போர்ட் ஒவ் ஸ்பெயின், ஜூலை 27

நூறாவது போட்டியில் சதம் அடித்ததன் மூலம் மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் ஹோப் தனித்துவமான சாதனையை படைத்துள்ளார்.

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஞாயிற்றுக்கிழமை நடந்த இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றது. இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 311 ஓட்டங்களைப் பெற்றது.

இதில், மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் சாய் ஹோப் 135 பந்துகளை சந்தித்து 8 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் என 115 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இந்த சதத்தின் மூலம் அவர் தனித்துவமான சாதனைக்கு சொந்தக்காராகியுள்ளார். ஏனெனில், இதுவரை சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் விளையாடிய வீரர்கள் யாரும் தாங்கள் விளையாடிய ஐம்பதாவது மற்றும் நூறாவது போட்டியில் சதம் அடித்தது கிடையாது. ஆனால், சாய் ஹோப் தனது நூறாவது போட்டியில் அடித்த சதத்தின் மூலம் சாதனையை படைத்துள்ளார். ஏற்கனவே அயர்லாந்து அணிக்கு எதிராக தனது ஐம்பதாவது ஒருநாள் போட்டியில் விளையாடியிருந்த சாய் ஹோப் 170 ஓட்டங்கள் அடித்திருந்தார். இந்நிலையில் நூறாவது ஒருநாள் போட்டியிலும் 115 ஓட்டங்கள் குவித்து சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் 50ஆவது மற்றும் நூறாவது போட்டிகளில் சதம் அடித்த ஒரே வீரர் என்ற தனித்துவமான சாதனையை படைத்துள்ளார். (ஐ)

# சுருண்டது பாகிஸ்தான் இலங்கை முன்னிலை!




காலி, ஜூலை 27

காலியில் நடக்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டி யில் முதல் இனிங்ஸில் பாகிஸ்தான் அணி 231 ஓட்டங் களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி 5 விக்கெட்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதன்மூலம், 323 ஓட்டங்களால் முன் னிலை பெற்றுள்ளது.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணி டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. இந்நிலையில், இரண்டாவது டெஸ்ட் போட்டி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 378 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்கு முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 191 ஓட்டங் களுக்கு 7 விக்கெட்களை இழந்து தடுமாறிய நிலையில், இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவடைந்தது.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டத்தை, யாசிர் ஷா 13 ஓட்டங்களுடனம், ஹசன் அலி ஓட்டம் எதையும் பெறா மலும் ஆட்டத்தை ஆரம்பித்தனர். இருவரும் ஓரளவுக்கு தாக்குப்பிடித்த நிலையில், ஹசன் அலி 21 ஓட்டங்களு டன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த நமுன் அலி ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார். யாசிர் ஷா 26 ஓட்டங் களைப் பெற்று இறுதி விக்கெட்டாக வீழ்ந்தார்.

பாகிஸ்தான் அணி 231 ஓட்டங்களுக்கு சகல விக் கெட்களையும் இழந்தது.

இலங்கை அணியின் பந்து வீச்சில் ரமேஷ் மெண்டிஸ் 5, பிரபாத் ஜெயசூரிய 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

147 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது இலங்கை அணி.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. நிரோசன் திக்வெல்ல 15, ஓசத பெர்னாண்டோ 19, குசல் மெண்டிஸ் 15 என வீழ்ந்தனர். அனுபவ வீரரான அஞ்சலோ மத்தியூஸ் நிலைத்து ஆட முயன்ற போதிலும் அவராலும் அதிக நேரம் நிலைக்க முடியவில்லை. அவர் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந் தார். அடுத்து வந்த தினேஷ் சந்திமால் 21 ஓட்டங்களுக்கு வீழ்ந்தார்.

எனினும், ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த திமுத் கருணாரத்ன - தனஞ்சய டீசில்வா இணை போராடி வருகிறது.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது 5 விக்கெட்கள் இழப்புக்கு 176 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றிருந்தது. திமுத் 27, தனஞ்சய 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பாகிஸ்தான் அணிக்காக நசீம் ஷா 2 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார்.

இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டமாகும். (ஐ)

# உலக தடகள சம்பியன்ஷிப் அமெரிக்கா முதலிடம்!

நியூயோர்க், ஜூலை 27

அமெரிக்காவில் நடைபெற்று வந்த 18ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி திங்கட்கிழமையுடன் (இலங்கை நேரப்படி) நிறைவடைந்தது.




இந்த மாதம் 15-ஆம் திகதி தொடங்கிய இப்போட்டி, 10 நாள்கள் நடைபெற்று 24ஆம் திகதியுடன் (அமெரிக்க நேரப்படி) முடிவடைந்தது.

சுமார் 180 நாடுகளைச் சேர்ந்த 1,700இற்கும் அதிகமான தடகள வீரர், வீராங்கனைகள் இதில், பங்கேற்றிருந்தனர். போட்டியின் நிறைவில் அமெரிக்கா 33 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது. தலா 10 பதக்கங்களுடன் எத்தியோபியா, நைஜீரியா முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தன.

போட்டியை நடத்திய அமெரிக்கா, உலக தடகள சம்பியன்ஷிப்பில் முதன்முறையாக 33 பதக்கங்கள் வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)






## தென்னாபிரிக்கா இங்கிலாந்து ரி - 20 போட்டி இன்று ஆரம்பம்!

லண்டன், ஜூலை 27

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையேயான 3 போட்டிக் கொண்ட ஒருநாள் தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

முதல் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 62 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து 118 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றது. 3ஆவது போட்டி மழையால் பாதியில் கைவிடப்பட்டது. அடுத்து இரு அணிகள் இடையேயான 20 ஓவர் தொடர் நடக்கிறது.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகள் மோதும் முதல் 20 ஓவர் ஆட்டம் பிரிஸ்டல் மைதானத்தில் இன்று நடக்கிறது. வெற்றியுடன் கணக்கை தொடங்கும் ஆர்வத்தில் இரு அணிகளும் உள்ளன. இதனால் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சகவீராங்கனையை வீழ்த்தி முதலிடத்தில் ஆஸி. கப்டன்!

டுபாய், ஜூலை 27

அவுஸ்திரேலிய அணியின் சக தோழமை வீரரான பெத் மூனியை வீழ்த்தினார் அந்த நாட்டின் அணித் தலைவியான மெக் லானிங்.

ஐ. சி. சி மகளிர் இருபது - 20 துடுப்பாட்ட தரவரிசையில் அவுஸ்திரேலிய அணித் தலைவி மெக் லானிங் சக நாட்டு வீராங்கனையான பெத் மோனியை பின்னுக்கு தள்ளி முதலிடத்தைப் பிடித்தார்.

முத்தரப்பு தொடரில் அயர்லாந்துக்கு எதிராக 74 ஓட்டங்கள் எடுத்த லானிங் முதலிடத்துக்கு முன்னேறினார். மூனி (728) லானிங் (731) புள்ளிகள் எடுத்துள்ளனர்.

தற்போது ஒருநாள் தரவரிசையில் 5ஆவது இடத்தில் இருக்கும் லானிங் 2014இல் முதல் முறையாக இருபது -20 தரவரிசையில் முதலிடம் பிடித்தார். மார்ச் மாதத்தில் இரண்டு நாட்கள் தவிர, நவம்பர் 2016 வரை அவர் முதலிடத்தில் இருந்தார். அதன் பிறகு முதன்முறையாக அவர் மீண்டும் முதல் இடத்தைப் பிடித்தார். அவர் 1,020 நாட்கள் முதலிடத்தில் இருந்தார்.

இங்கிலாந்தின் சார்லோட் எட்வர்ட்ஸ் (1,092) மற்றும் கரேன் ரோல்டன் (1,085) ஆகியோருக்குப் பின் அவர் முதலிடத்தில் இருந்தார்.

அவுஸ்திரேலியா பந்துவீச்சாளர்களில், ஜெஸ் ஜோனாசென் நான்கு இடங்கள் முன்னேறி ஆறாவது இடத்தைப் பிடித்தார். அதே சமயம் வேகப்பந்து வீச்சாளர் நிகோலா கேரெட் மேலும் 20 இடங்கள் முன்னேறி 32-வது இடத்தைப் பிடித்துள்ளார். (ஐ)



# பாடசாலை போக்குவரத்து சேவையை பலப்படுத்த வேண்டியது அவசியம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 27

பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகையை அதிகரிப்பதற்கு பாடசாலை போக்குவரத்து சேவையை பலப்படுத்த வேண்டியது அவசியமாகும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டு வந்த நிலையில் தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் அரச சேவையானது தொடர்ந்து முடக்கப்பட்டே உள்ளது. அரசாங்க அலுவலகலங்களுக்கு ஊழியர்களை வேலைக்கு அழைப்பதை மட்டுப்படுத்தும் வகையில் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பிரச்னையை தீர்க்காததன் காரணமாகவே அரசாங்க அலுவலகங்களின் வழமையான செயல்பாடுகள் முடங்கியுள்ளன. எவ்வாறாயினும் பாடசாலைகள் மீள



திறக்கப்பட்டதை வரவேற்கின்றோம். பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்படுவதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்க வேண்டியது அவசியமாகும். அரசாங்கத்தின் நெருக்கடிகளை காரணமாக வைத்து மாணவர்களின் கல்வியை இல்லாமல் ஆக்க முடியாது.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் நகரப்புற பாடசாலைகளில் மாணவர்களின் வருகை நூற்றுக்கு 50 சதவீதமாகவே காணப்படுகின்றது. சில பாடசாலைகளில் நூற்றுக்கு 30, 35 சதவீதமான மாணவர்களே பாடசாலைக்கு வருகை தருகின்றனர்.

பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகையை அதிகரிப்பதற்கு பாடசாலை போக்குவரத்து சேவையை பலப்படுத்த வேண்டியது அவசியமாகும். பாடசாலை வாகனங்களுக்கு தேவையான எரிபொருளை முறையாக பெற்றுக்கொடுக்க வேண்டும்.

எனினும் இவ்விடயத்தில் அரசாங்கம் உணர்ந்து செயல்படவில்லை என்பது மட்டுமே உண்மை. பாடசாலை போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்கு டிப்போக்களினூடாக எரிபொருளை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், சகல மாணவர்களும் பாடசாலை போக்குவரத்தில் ஈடுபடும் வான்கள் உள்ளிட்ட வாகனங்களில் பாடசாலைக்கு வருவதில்லை. பொதுப்போக்குவரத்தை பயன்படுத்தும் மாணவர்களும் உள்ளனர்.

பெரும்பான்மையான மாணவர்கள் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்துபவர்களாகவே உள்ளனர். எனவே, இவர்கள் தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அதேபோன்று, ஆசிரியர்களின் வருகை தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும் - என்றார். (கே)

# எரிபொருள் பிரச்னையால் சுகாதார சேவை ஸ்தம்பிதம்

## மருத்துவர் ஜயருவான் பண்டார

கொழும்பு, ஜூலை 27

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்னையானது சுகாதார சேவையை ஸ்தம்பிதம் அடைய செய்துள்ளது என்று மருத்துவர் ஜயருவான் பண்டார தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவை எதிர்கொண்டுள்ள எரிபொருள் பிரச்னைக்கு இதுவரை தீர்வு பெற்றுக்கொடுக்கப் படவில்லை என்றும் அவர் கூறினார்.

செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு,

சுகாதார சேவை எதிர்கொண்டுள்ள எரிபொருள் பிரச்னைக்கு இதுவரை தீர்வு பெற்றுக்கொடுக் கப்படவில்லை. சுகாதார சேவையை சேர்ந்த தரப்பினர் தொடர்ச்சியாக எரிபொருள் வரிசையில் நிற்க வேண்டிய நிலைமைக்கே தள்ளப்பட்டுள்ளனர்.

கியூ. ஆர். முறை செயல்படுத்தப்படுதவதாகக் கூறப்பட்டாலும் அது நடைமுறையில் சாத்தியமாகியுள்ளதா என்பது கேள்விக்குறியே. சுகாதார சேவையினர் எதிர்கொண்டுள்ள எரிபொருள் பிரச்னைக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதுவே உண்மை நிலவரம். டெங்கு பரவல் உள்ளிட்ட நோய் நிலைமைகளுக்கு உள்ளாகும் நோயாளர்களை வைத்தியசாலைகளுக்கு கொண்டுவருவதற்குக்கூட முடியாத நிலைமையே நாட்டில் காணப்படுகின்றது.

நோயாளர்களை வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கான வசதிகள்கூட நாட்டில் தற்போது இல்லை என்பதே உண்மையான நிலவரம். அதேபோன்று சுகாதார சேவையினருக்கு வைத்தியசாலைக்கு வருவதற்கான சூழல் இல்லை.

எனவே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை சிறிய விடயமாகக் கருதிவிட முடியாது. இந்தப் பிரச்னைகளால் நெருக்கடிக்கு உள்ளானவர்களே போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் - என்றார். (கே)

# அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானம் 70 வீதத்தால் சரிவு!

கொழும்பு, ஜூலை. 27

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடியால் அதிவேக நெடுஞ்சாலைகளின் நாளாந்த வருமானம் 70 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரச் சபையின் பணிப்பாளர் நாயகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் நாளாந்தம் 30 மில்லியன் ரூபாவரை வருமானம் கிடைக்கப்பெற்று வந்த நிலையில், தற்போது அது 8 மில்லியன் ரூபா வரை குறைவடைந்துள்ளது.

இலங்கையில் இரு மாதங்களுக்கு மேலாக எரிபொருள் தட்டுப்பாடு நீடிக்கின்றது. எரிபொருளை பெறுவதற்கு பல நாட்கள் வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலையும் உள்ளது.

இதனால் பெருமளவான பயணிகள் தூர இடங்களுக்கு சொந்த வாகனங்களில் பயணிப்பதை கைவிட்டுள்ளனர், பொது போக்குவரத்தையே அவர்கள் தெரிவுசெய்கின்றனர்.

மறுபுறத்தில் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்ப நிலையால் சுற்றுலா செல்பவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான ஏற்பாடும் அமுலில் இருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானம் சடுதியாக குறைவடைந்துள்ளது.(அ)

# முறைமை மாற்றத்துக்கான சிறந்த சந்தர்ப்பம் இதுவே!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார

கொழும்பு, ஜூலை 27

முறைமை மாற்றத்தையே போராட்டத்தினூடாக நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த முறைமை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சந்தர்ப்பம் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

கொழும்பு காலிமுகத்திடல் போராட்டம் தொடர்பில் அண்மைய நாட்களாக பேசப்படுகின்றன. கோட்டா கோ ஹோம் என்று கூறியே முதலில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கோட்டா கோம் ஹோம் என்று முதலில் யார் கூறியது? நாங்களே கோரினோம். முதலில் வீதிக்கு இறங்கி கோட்டா கோ ஹோம் என்ற போராட்டத்தை வெளியில் கொண்டு வந்தவர்கள் நாங்கள்.

அதன் பின்பு மக்கள் எம்முடன் கைக்கோத்தனர். அதேபோன்று ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் சென்று கோட்டா கோ ஹோம் என்று கூறியவர்களும் நாமே. அதன் பின்பு இளைஞர்கள் அந்தப் போராட்டத்தில் கைகோர்த்தனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெளியேறுமாறு கோரியும் முறைமை மாற்றத்தை கோரியும் நாட்டின் பிரச்னைகளை தீர்க்குமாறும் கோரியும் இளைஞர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

உண்மையில் இளைஞர்களின் அந்த கோரிக்கைகளுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். அதேபோன்று கோட்டா கோ ஹோம் போராட்டத்துக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை நாம் எப்போதும் வழங்கி வந்தோம்.

முன்னாள் பிரதமர் பதவி விலகியதன் பின்னர் அதற்கான சவால்களை ஏற்றுக்கொள்ள யாரும் முன்வராதபோது நாம் துணிந்து அந்த சவால்களை ஏற்றுக்கொண்டோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து அமைச்சு பதவியை பெற்றாலும்கூட முதலில் நீங்கள் எப்போது பதவயிலிருந்து விலகுவீர்கள் என்றே அவரிடம் நாம் வினவினோம்.

சர்வகட்சி அரசாங்கத்தை எப்போது அமைப்பீர்கள் என்று அவரிடம் கேட்டோம். இவ்வாறான சூழ்நிலையில் கோட்டா கோ ஹோம் என்ற முதலாவது கோரிக்கை நிறைவேறியுள்ளது.

அடுத்ததாக அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தினூடாக நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டு, மீண்டும் 19ஆவது திருத்தத்தை கொண்டுவருவதற்கு நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதேபோன்று நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதற்கான அரசியலமைப்பு ரீதியிலான செயல்பாடுகளை எதிர்காலத்தில் நாம் முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (கே)

# பாராளுமன்ற அமர்வு நாட்களில் அமைச்சர்கள் வருகை கட்டாயம்

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

பாராளுமன்ற அமர்வு நாட்களில் அனைத்து அமைச்சர்களும், பாராளுமன்றத்தில் சமூகமளித்திருக்க வேண்டும் என்று ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நடைபெறுகின்றது.

இதன்போதே அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தன இந்த தகவலை வெளியிட்டார்.

மக்கள் பிரச்னைகள் தொடர்பில் எதிரணிகளால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்காகவே அமைச்சர்களுக்கு இவ்வாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.(அ)

# மூன்று திணைக்களங்களுக்கு புதிய அதிகாரிகள் நியமனம்

கொழும்பு, ஜூலை. 27

திணைக்களங்களின் உயர் பதவிகளுக்குப் புதிதாக மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அதற்கமைய இலங்கை சுங்கத்தின் பணிப்பாளர் நாயகமாக பீ.பி.எஸ்.சி. நோனிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை சுங்கத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள அவர், முன்னதாக பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக செயற்பட்டு வந்தார்.

இதேவேளை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக டீ. ஆர்.எஸ். ஹப்புஆராச்சியும், திறைசேரியின் பிரதிச் செயலாளராக டபிள்யூ.ஏ.சத்குமாரவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சரவைப் பேச்சாளர் மேலும் கூறினார். (அ)

## பொருளாதார...

அடைவதற்கான நிகழ்தகவு 20வீதமாகவும், தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் மந்த நிலைக்கு செல்லும் நிகழ்தகவு 25 வீதமாகவும் உள்ளன.

தவிர, நியூசிலாந்து, தாய்வான் , அவுஸ்திரேலியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் மந்தநிலை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை முறையே 33 சதவீதம், 20 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 8 சதவீதம் என்று கணிப்பிடப்பட்டுள்ளன.

இதனையடுத்து அந்த நாடுகளின் மத்திய வங்கிகள் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வட்டி விகிதங்களை உயர்த்தி வருகின்றன என்று ப்ளூம் பேர்க் அறிக்கை கூறுகிறது.

ஆசியாவின் மந்தநிலை ஆபத்து சுமார் 20-25 சதவீதமாக உள்ள நிலையில் அமெரிக்காவுக்கான நிகழ்தகவு 40 வீதம் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவுக்கான நிகழ்தகவு 50-55 சதவீதமாக உள்ளது. (ஐ)

## இந்தியா...

செலுத்தப்பட்ட கட்டணத்துக்கான எரிபொருள் கப்பல்கள் அடுத்த மாதம் (ஓகஸ்ட்) நடுப் பகுதி வரை வரவுள்ளன. 3 டீசல் கப்பல்கள், 2 பெற்றோல் கப்பல்கள் இவ்வாறு வரவுள்ளன. இதன்மூலம் ஓகஸ்ட் நடுப்பகுதி வரை எரிபொருள் மக்களுக்கு வழங்கப்படும். ஆனால், அதன் பின்னர் எரிபொருள் கொள்வனவில் நிச்சயமற்ற நிலைமையே நீடிக்கும்.

ஏனெனில், வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் கொள்வனவுக்கு மாத்திரம் 350 - 400 மில்லியன் டொலர்கள் மாதாந்தம் தேவை. மின்சார தேவையையும் சேர்த்து 550 மில்லியன் டொலர்கள் தேவை. ஆனால், எங்களிடம் டொலர்கள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன. இந்தியா அல்லது சீனா உதவினால் எரிபொருள் பிரச்னையை இலகுவாக தீர்க்கலாம் - இதுவே ஒரே வழியும் கூட. ஆனால், இந்த உதவியைப் பெறுவதில் நிச்சயமற்ற நிலைமையே உள்ளது.

இருப்பைப் பயன்படுத்தி செலுத்திய கட்டணத்துக்கான எரிபொருள்கள் அடுத்த மாத நடுப்பகுதியில் வந்து சேரலாம். இதற்கு பின்னரான எரிபொருளை கண்டுபிடிப்பது - பெறுவது நிச்சயமற்றது.

எனினும், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதியுதவி கிடைத்தால் இந்தப் பிரச்னைக்கு ஓரளவுக்கு தீர்வு காண முடியும். சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் உறுதியான நிலையை எட்டினால் மட்டுமே மற்றைய வெளிநாடுகளும் நிதியுதவி அளிக்கும். எவ்வாறாயினும், அவ்வாறான நிபந்தனைகள் இன்றி இந்தியா மட்டுமே நிதியுதவி வழங்குகிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

## இலங்கை...

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் கடன் உதவியில் நிர்மாணிக்கப்பட்டது. அதிக வட்டியுடனான கடன் உதவியில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கடனை திருப்பிச் செலுத்த முடியாததால் 99 வருடங்களுக்கு அந்தத் துறைமுகம் சீனாவிடமே வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே, அம்பாந்தோட்டைக்கு வரும் சைனாஸ் யுவான்வாங் - 5 விண்வெளி கண்காணிப்பு கப்பல் குறித்து இந்தியா கவலைகொள்கிறது.

சைனாஸ் யுவான்வாங்-5 விண்வெளி கண்காணிப்பு கப்பல் விண்வெளி - தரை தகவல் பரிமாற்றத்தை செயல்படுத்தி வருகிறது. அத்துடன் செயற்கைக்கோள்களின் சுற்றுப்பாதை நிர்ணயம் மற்றும் அணுகலுக்கு முக்கியமான தகவல் வழங்குவதில் நிபுணத்துவம் பெற்றது என்று கூறப்படுகின்றது. (ஐ)

## வேகமெடு...

பெப்ரவரியில் கோவிட் 19 தொற்று பரவ ஆரம்பித்தது முதல் நாட்டில் 6 இலட்சத்து 65 ஆயிரத்து 94 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், 16 ஆயிரத்து 544 பேர் மரணமாகினர்.

இதேசமயம், தொற்றுநோயை தவிர்க்க பொதுமக்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும். நான்காவது தடுப்பூசியைப் பொதுமக்கள் விரைவாகப் பெறவேண்டும். குறிப்பாக பொது இடங்களிலும், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும்போதும் அதிகளவு மக்கள்கூடும் உள்புற இடங்களிலும் முகக்கவசம் அணிவது உள்ளிட்ட ஏனைய சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றவேண்டும்.

விஞ்ஞான ஆய்வின்படி, முன்னர் குறிப்பிட்டபடி ஜூன் 31ஆம் திகதி தடுப்பூசி ஒக்ரோபர் 31ஆம் திகதியே காலாவதியாகும். தடுப்பூசி குறித்தும், அதன் காலாவதி குறித்தும் மக்கள் அச்சப்படத் தேவையில்லை.

தொற்றுநோயியல் பிரிவின் கூற்றுப்படி, 17.1 மில்லியன் மக்கள் தடுப்பூசியின் முதல் டோஸையும், 14.5 மில்லியன் மக்கள் இரண்டாவது டோஸையும் 8 மில்லியன் பேர் 3ஆவது தடுப்பூசியையும் பெற்றுள்ளனர். 15,280 பேர் மட்டுமே நான்காவது தடுப்பூசியை பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தேசிய...

ஆரம்பமாகின.

தொழில்சங்கங்கள், சிவில் அமைப்புகள் போன்றவற்றை ஒன்றிணைத்து இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தேசிய சபைக்கு வரும் சிறந்த முன்மொழிவுகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்றும் எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டார். (ஐ)

## இன்று..

தப்பட்டது. மாலை 4.30 மணி வரை இந்த விவாதம் இடம்பெறவுள்ளது என்று பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 17ஆம் திகதி சிறப்பு வர்த்தமானி மூலம் அவசரகால சட்டம் பிறப்பிக்கப்பட்டது. விதிகளின்படி இந்தப் பிரகடனத்துக்கு 14 நாட்களுக்குள் பாராளுமன்றின் ஒப்புதல் பெறாவிடின் அது இரத்தாகும். இந்நிலையில், இன்று அதற்கான அங்கீகாரம் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## ஐ. எம்...

'நாட்டின் அனைத்து விடயங்களும் தொடர்ந்து நெருக்கடி நிலையில் இருக்கும்போது சர்வதேச நிதியத்தால் அரசாங்கத்துடன் பேச்சுகளை நடத்தமுடியாது. எனவே, நிலையான அரசாங்கம் அமைக்கப்பட்டு, நிதி அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படும் வரையில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு யாரும் இருக்கப்போவதில்லை' என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் கடந்த சில மாதங்களாக பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், பாராளுமன்ற வாக்கெடுப்பின் ஊடாக புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டதன் பின்னரும் நெருக்கடி நிலவரம் தொடர்கின்றது. அதுமாத்திரமன்றி சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களும் தடைப்பட்டிருக்கும் பின்னணியில், 'தமது நிதி மீளச்செலுத்தப்படமாட்டாது என்ற நிலை காணப்படும்போது சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்க முன்வராது' என்று பேராசிரியர் டெபோரா ப்ரோட்டிகம் தெரிவித்துள்ளார்.

'அதற்கான உரியவாறான உத்தரவாதத்தை இலங்கையால் வழங்கமுடியாவிட்டால், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து எந்தவோர் உதவியையும் எதிர்பார்க்கமுடியாது' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோட்டாபயவும், மகிந்தவும் போய்விட்டார்கள் நாட்டில் இப்போது பாலும், தேனும் ஓடுகிறதா?

### கேட்கிறார் மகிந்தவின் சகா விமலவீர திஸாநாயக்க

கொழும்பு, ஜூலை. 27

எழுபத்திரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டபோது சட்டத்தரணிகள் அமைப்போ மனிதாபிமான அமைப்புகளோ தூதுவர்களோ அந்தக் குற்றத்திற்கு எதிராக ருவிட்டர் செய்திகளை வெளியிடவில்லை என முன்னாள் அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

69 இலட்சம் மக்களின் ஆணை பெற்று ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷவும், கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு அதிகாரத்துடன் பிரதமர் பதவிக்கு வந்த மகிந்த ராஜபக்ஷவும் வீட்டுக்குச் சென்றால், நாடு சுபீட்சமாகும் என வீதியில் இறங்கிப் போராடினார்கள். அவர்கள் சொன்னது உண்மையெனில், இப்பொழுது பூக்கள் பூத்து, விதைகள் விதைத்து, பாலும் தேனும் ஓடத் தொடங்கியிருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வீடுகள் எரிந்ததால் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தெருவில் விழுந்து கிடப்பதாகவும், தானும் தெருவில் விழுந்தவர் தான் என்றும் அவர் கூறினார்.

காதணி அணிந்து தாடி வளர்த்தவர்களின் போராட்டங்களில் தமக்கு பிரச்னை இருப்பதாகத் தெரிவித்த விமலவீர திஸாநாயக்க, இவர்கள் இந்த நாட்டை எங்கு கொண்டு செல்ல முயல்கிறார்கள் என்பது பொதுப்புத்தி உள்ள அனைவருக்கும் நன்றாகவே தெரியும் எனவும் தெரிவித்தார். (அ)



# கல்வயல் வீரகத்தி கோவில் இராஜகோபுர மலர் வெளியீடு

தென்மராட்சி, ஜூலை 27

சாவகச்சேரி - கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்படும் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஏழு தளங்கள் கொண்டதாக 81 அடி உயர ராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டமையை ஒட்டி ஆக்கப்பட்ட சிறப்பு மலரின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆலய தேர்த் திருவிழாவின் போது இடம்பெற்றது.

வரணி கரம்பை அ. மி. த. க. பாடசாலை அதிபர் ச. அகிலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ராஜகோபுரத் திருப்பணியை உபயமாக மேற்கொண்ட பிரித்தானிய மருத்துவர் ச. ஜெயநாதன் மலரை வெளியிட்டு வைத்தார். கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் மலருக்கான நயப்புரையை ஆற்றினார்.

ஆலய தர்மகர்த்தா சி. விவேகானந்தன், மலர் ஆசிரியர் திருக்கணிதம் சிவஞானம் கோபுர நிர்மாணக் கலைஞர் மணிகண்டன் குழுவினர் ஆகியோருக்கான கௌரவிப்புகளும் இடம்பெற்றன. (ஐ)

# மக்களுக்கு தேவையான மருந்துகளை தட்டுப்பாடு இன்றி வழங்க பணிப்புரை

கொழும்பு, ஜூலை. 27

மக்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கான செயற்திட்டத்தை முறைப்படி முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மருந்து இறக்குமதியை நிர்வகிப்பது தொடர்பில் சுகாதார திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில் மருந்து உற்பத்தியை விரைவுபடுத்துவதற்கு தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதால், அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடி அதற்கான நடைமுறைகளை தயாரிக்குமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

உலக வங்கியினால் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 23 மில்லியன் டொலர்களில் இதுவரை 18.6 மில்லியன் டொலர்கள் பெறப்பட்டுள்ளமை இந்த கலந்துரையாடலின்போது தெரிய வந்துள்ளது. (அ)

## மீண்டும் முகக்...

அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதனால் கோவிட் பரவுவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும் என சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக விலகல் மற்றும் கைகளைக் கழுவுதல் போன்ற சுகாதார நடவடிக்கைகள் தொடர்ச்சியாக பின்பற்றப்படவேண்டும் என அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருவதாக சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு




# குறைக்கப்படுகின்றது எரிபொருளின் விலை?

கொழும்பு, ஜூலை 27

எதிர்காலத்தில் எரிபொருள் விலை குறைவடையக் கூடும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

உல சந்தையில் தற்போதைய விலை நிலவரத்தின் படி எதிர்காலத்தில் எரிபொருள் விலை மேலும் குறைவடையும் வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம், அடுத்த எரிபொருள் விலைத் திருத்தத்தின் மூலம் எரிபொருள் விலை குறையக் கூடும் என எதிர்ப்பார்க்கப்படுவதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவைகள் எரிபொருள் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

ஒவ்வொரு மாதமும் 1 ஆம் மற்றும் 15 ஆம் திகதிகளில் எரிபொருட்களின் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இவ்வாறு எரிபொருட்களுக்கான விலைகள் குறைக் கப்படுமாக இருந்தால், அத்தியாவசியப் பொருட்களுக் கான விலைகளும் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)




## மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 08 - 1970



மறைவு 24 - 07 - 2022

### வேலாயுதப்பிள்ளை கெங்கராசன்

யாழ். புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Zürich ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை கெங்கராசன் அவர்கள் 24.07.2022 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, இராசம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மருமகனும்,கார்த்திகா அவர்களின் ஆருயிர்க் கணவரும், அஸ்வின், அபிஷாந், அக்ஷயா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதராசன், கனகேஸ்வரி, சௌந்தரராசன் (பாண்டியன்), சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,பாபு, கோபு, ராசா, ராதிகா, தாரணி, குணபாலன், ஸ்ரீறமணி திருக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சசிகலா, கவிதா, றமணன் ஆகியோரின் அன்புச் சகலனும், தரணிகா, பபிதரன், சாருஜி, சியானுஜி, சாருஜன், டிலக்ஷன், அஜய், கவினா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும்,கௌசிகா, குகநாத், சுகிர்தன், வினோஜன், தர்ஷிகா, யஸ்மிதா, சுஸ்மிதா, அபிரன், ரிஷபா, அஸ்மிகா, சரணியா, சன்சய், சமிரா, ஆதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

பார்வைக்கு
Tuesday, 26 Jul 2022 9:00 AM - 4:30 PM
Bucheggplatz Krematorium Nordheim Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

நல்லடக்கம்
Wednesday, 27 Jul 2022 9:00 AM - 1:00 PM
Bucheggplatz Krematorium Nordheim Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திருக்குமார் - மைத்துனர்**

தொடர்புகளுக்கு:
**கார்த்திகா - மனைவி** Mobile : +41794248887
**வரதன் - சகோதரன்** Mobile : +94772151148
**பாண்டியன் - சகோதரன்** Mobile : +41763412170
**ராசாத்தி - சகோதரி** Mobile : +447405167308
**திருக்குமார் - மைத்துனர்** Mobile : +41788869106
**ரதி - சகோதரி** Mobile : +41794058298
**பாபு - மைத்துனர்** Mobile : +41738596631
**கோபு - மைத்துனர்** Mobile : +16479627109
**ராதிகா - மைத்துனி** Mobile : +61420670677

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 07 - 1931



மறைவு 25 - 07 - 2022

### சின்னத்துரை வரதராஜா

(ஓய்வுபெற்ற இலங்கை மத்திய வங்கி ஊழியர்)

யாழ். கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடி, கொழும்பு, சண்டிலிப்பாய், கல்வயல் சாவகச்சேரி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை வரதராஜா அவர்கள் 25.07.2022 திங்கட்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்துரை, மாணிக்கம் தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற முருகேசபிள்ளை, முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும்,மகேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும்,காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, பொன்னுத்துரை மற்றும் விஜயரட்ணம், காலஞ்சென்ற மனோன்மணி, தவலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயக்குமார், பாலகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜானி, கௌந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவிராம் அவர்களின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சிவபாக்கியம், கமலாம்பிகை, ஜெயரட்டினம், தையல்நாயகி, காலஞ்சென்ற தம்பு, ராஜரட்னம், குணரட்னம், பரமானந்தம், காலஞ்சென்ற அரியமலர், சிவனேசன் ஆகியோரின் மைத்துனரும்,ஈசன், உமா, ரதி, வாசன், அப்பன், சுபாஸ் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும்,பெரியதம்பி, ஜெயா, ராசாத்தி, தருமன், சிஸ்ரீ, ரவி, பவா, மஞ்சுளா, கெங்கன், சியாமளா, பாஸ்கரன், பிரிந்தா, உசாந்தி, தவானி, விந்தியா, தர்சிகா, கயுரிக்கா ஆகியோரின் அன்பு மாமாவும், லதா, கண்ணன், ஜெயந்தி, விஜயா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.07.2022 செவ்வாய்க் கிழமை அன்று பி.ப 2:00 மணியளவில் கண்ணாடிப் பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பாலகுமார் - மகன்.**

தொடர்புகளுக்கு:
**ஜெயக்குமார் - மகன்** Mobile : +33751862733
Phone : +33142052602
**பாலகுமார் - மகன்** Mobile : +447931291679
Phone : +442087077807
**கேதீஸ்வரன் (அப்பன்) - பெறாமகன்**
Mobile : +94777249463

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 - 01 - 1934



மறைவு 24 - 07 - 2022

### ஆறுமுகம் பொன்னப்பா குலசிங்கம்

(முன்னாள் யாழ். கல்வித்திணைக்கள லிகிதர், முன்னாள் ஆசிரியர் - ஹட்டன் கைலன்ஸ் மகாவித்தியாலயம், யாழ். செங்குந்தா மகாவித்தியாலயம், முன்னாள் உப அதிபர்- யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயம், முன்னாள் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொருளாளர்)

யாழ். வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். சீனிவாசகம் வீதி கொட்டடி, பிரித்தானியா லண்டன் Northwood ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பொன்னப்பா குலசிங்கம் அவர்கள் 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னப்பா ஏலாம்பிகை தம்பதிகளின் கனிஸ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான நடராஜா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,சரஸ்வதி(முன்னாள் ஆசிரியர் கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும்,காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் பரராஜசிங்கம்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாந்தினி, குமுதினி, மாலினி, சுதாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீகாந்தன், தம்பிநாதன், சண்முகநாதன், சுஜித்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், தாட்சாயினி, Dr.மீனுஷா, ஜானவி, றங்கீத், தரங்கீத், காயத்திரி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற ஞானப்பூங்கோதை, செகேஸ்வரி, காலஞ்சென்ற பத்மாவதி, சிவராஜா, புவனேஸ்வரி, செல்வராஜா- கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ஞானவசந்தி, குகவதனி, தசவரதன், நக்கீரன், பரமேஸ்வரன், ஜெகதீஸ்வரன், ஜெயரஞ்சினி, ஜெயராஜ சேகரன், சுரேஸ்வரன், குலரஞ்சினி, மனோரஞ்சினி, சதீஸ்வரன், காசீபன் ஆகியோரின் சிறிய தகப்பனாரும்,அமிர்தரஞ்சன், ரமணி, தர்சினி, மதனலோஜினி, சுகிர்தவேணி, கோகுலதர்சன், கோகுலவதனன், டாரகா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும்,சசிகா, பிரதீப், வினுதீப் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

கிரியை
Sunday, 31 Jul 2022 7:00 AM - 10:00 AM
Oshwal Ekta Centre 366A Stag Ln, London NW9 9AA, United Kingdom

தகனம்
Sunday, 31 Jul 2022 11:00 AM
Golders Green Crematorium 62 Hoop Ln, London NW11 7NL, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஸ்ரீகாந்தன் சாந்தினி - மகள்**

தொடர்புகளுக்கு:
**சுதா - மகன்** Mobile : +447904517543
**ஸ்ரீகாந்தன் சாந்தினி - மகள்**
Mobile : +16475688614
**தம்பிநாதர் குமுதினி - மகள்** Mobile : +16477640685
**சண் மாலினி - மகள்** Mobile : +447951596128

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.05 மணி : உளநலம்-காசி ஜீவலிங்கம் (யாழ்பாவாணன்)



7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
07.00 மணி : பாரதீ



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒளிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு